இலவசம் - வியாழன் தோறும்
CANADA EELAMURASU


ஈழமுரசு

முரசு: 20 | மார்ச் 29, 2018 | இதழ்: 113



387வது நாளாக தொடரும் போராட்டம்





ஆனந்தசுதாகரனை விடுவிக்கக்கோரி முல்லைத்தீவில் கையெழுத்துப் போர்

பொதுவாக்கெடுப்பு கோரும் மக்கள் அரங்கம்

றொறன்ரோ– ஏப்ரல் 15 2018

தொடர்புகளுக்கு: Tel: 416-751-8483

TRANSNATIONAL GOVERNMENT OF TAMIL EELAM

ஈழமுரசு தொடர்புகட்கு: 416.561.3302, 647.808.7766(கண்ணன்)

www.mahudam.com

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை



ABS MR.P.SINGARAJ அழையுங்கள்

வாகன விபத்தா?

TEL: 416.993.8443, 905.471.3058

NO COMMISSION FROM THE BENEFIT

MICHAEL TAYLOR
A PROFFESIONAL CORPORATION

MORTGAGES, REFINANCING & LOANS

HOME OWNERS GET APPROVED



வாழ்க்கையாளர்கள் அடமான நிதியுதவி பெற, அல்லது தங்கள் நிதித்தேவைகளை பூர்த்திசெய்ய வங்கிகளில் போராடி வருகின்றார்கள். அவர்களுக்கு உதலிசெய்வதே எங்கள் முதன்மையான நோக்கம்.

IN NEED OF EXTRA CASH...?

WE CAN HELP YOU TO FIND THE SOLUTION

Get **APPROVED** on equity, **not credit**
1st & 2nd mortgages - Residential/ Commercial
Refinance - Residential/ Commercial Mortgages
Debt Consolidation,
Heloc

Special Offer

- **UNSECURED** BUSINESS LOAN UP TO **100K**
- **UNSECURED** PERSONAL **LINE OF CREDIT**/LOANS

CREDIT NOT REQUIRED

- **Short term Loan (Secured) Up to $100,000**

Bad credit

Bankruptcy,
Consumer proposal
NO PROBLEM

Private Mortgages up to 90% ltv.
We will get you the best rate (we work for YOU not the BANK)

NATWEST CAPITAL
TIMES CHANGE. VALUES DON'T
Powered by CENTUM Mortgage Choice Corp.

BERNADINE PONNIAH
CEO / MORTGAGE PLANNER LIC. 12546
Tel: 416-550-1364

*Some conditions may apply.

அனைத்துவிதமான மோர்கேஜ் தேவைகளுக்கும், ஆலோசனைக்கும் அழையுங்கள்

- Purchese
- Pre-Approval
- Equity Line of Credit
- 1st & 2nd Mortgages
- Renewals/Refinancing
- Self Employed/ New Immigrant



Manoranjan Kandasamy
Mortgage Agent (Lic# M15002135)
MORTGAGE ALLIANCE
Cell:647.289.4543
Email:manokanda1@gmail.com
The Mortgage Alliance Company of Canada
FSCO NO.10530
2005 Sheppard Ave. East, Unit 200, Toronto ON M2J 5B4



SUN CITY SUPER MARKET
OPEN 7 DAYS

வாடகைக்கு வணிக இடம்

Markham & Finch சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Sun City Plaza வில் உடன் வாடகைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:
தீபன் 647-998-4445

GASA RESTAURANT
Take-Out & Catering

இது நம்ம ஊரு சாப்பாடு
905.471.6300
50 New Delhi Dr., Unit 51,
Markham ON L3S 0B5

Life's brighter under the sun



Easan Krishna-Pillai, CFP®
Bus: 416-557-7384
Res: 905-886-7399
easan.krishna@sunlife.com
www.sunlife.ca/easan.krishna

Mutual funds distributed by Sun Life Financial Investment Services (Canada) Inc. Sun Life Assurance Company of Canada is a member of the Sun Life Financial group of companies.
© Sun Life Assurance Company of Canada, 2018.

Sun Life Financial



Century 21
PERCY FULTON LTD.
Independently Owned And Operated BROKERAGE
Ravi Gunasingham
Sales Representative
Direct: **416-432-5499**
ravigunahomes@gmail.com
www.century21.ca/ravi.gunasingham
2911 Kennedy Road, Toronto ON. M1V 1S8
T: 416-298-8200 F: 416-298-6602

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public



416-289-9229

- Real Estate Law
- Immigration Law
- Wills and Estate
- Power of attorney for personal care and property
- Business Law

Notary Services
- Statutory Declarations & Affidavits
- Commissioning & Notarization

1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmer)

OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business

only location in GTA
PARK PLAZA

Tel: 416.285.6900
Fax: 416.285.4877
1646 Victoria Park Ave., Suite 1
(Between Lawrence & Eglinton)
TORONTO, ON, M1R 1P7

Email: OATC@oceantax.ca web: www.oceantax.ca

Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

ROYAL LePAGE
Terrequity Realty
www.peranathan.com



Pera Savuntharanathan
Real Estate Broker
nsavuntharanathan@terrequity.com
(416) 721-6563
INCOME TAX
Starting $25

நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE

எமது சேவைகள்:

1. சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
2. பழைய தங்க நகைகள் அதிகூடிய விலையில் வாங்கப்படும்.
3. புதிய தங்கநகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்



Rangan: 647-947-2864
647-702-2159
(Markham & Steeles)
6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7

MOTOR VEHICLE ACCIDENT



TRAFFIC TICKETS
SK THEESAN
தீசன்
416-803-5296
SKT Paralegal Service

People's Choice
Remedy's Rx

அனைத்து விதமான காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்

1145 Morningside Ave. #16 , Scarborough
(குணம்ஸ் சுப்பமார்க்கேட்டிற்கு அருகாமையில்)

Tel: 647-748-7337

ஈழமுரசு

ஆனந்தசுதாகரன்

எட்டு வருடகாலமாக சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரின் விவகாரம் தமிழ் மக்கள் அனைவரதும் மனச்சாட்சியைத் தொட்டிருக்கின்றது. தமது இளமைக்காலத்தை - குடும்ப வாழ்க்கையைத் தியாகம் செய்துவிட்டு எமக்காகப் போராடப்புறப்பட்ட ஒருவனின் விடுதலைக்காக நாம் எல்லோரும் ஏதோ ஒரு வழியில் போராட வேண்டும் என தமிழர்கள் அனைவருமே உணரத் தொடங்கிவிட்டார்கள். கடந்த வாரம் ஆனந்தசுதாகரனின் மனைவி மரணமடைந்ததும், அவரது இரு பிள்ளைகளும் அனாதரவாகியிருப்பதும்தான் இதற்குக் காரணம். மரணச் சடங்கிற்காக 3 மணிநேர விடுப்பில் வந்த சுதாகரன், சிறைச்சாலைக்கு திருப்பி அழைத்துச் செல்லப்படும் போது, அவரது மகளும் பஸ்ஸில் ஏறமுற்பட்டது தமிழ் மக்கள் அனைவரது மனச்சாட்சியையும் தொட்டிருக்கின்றது.

உண்மையில், அனந்தசுதாகரன் ஒரு அடையாளம் மட்டும்தான். ஆனந்தசுதாகரனைப் போல இன்னும் 100 அரசியல் கைதிகள் சிறைகளில் வாடுகின்றார்கள். அவர்களுடைய குடும்பங்களின் நிலையும் ஆனந்தசுதாகரின் நிலையில்தான் உள்ளது. அரசியல் கைதிகளின் விடுதலை, விசாரணைகளைத் துரிதப்படுத்துவது என்பன குறித்து, உள்நாட்டில் மட்டுமன்றி ஐ.நா.வுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் கூட அரசாங்கம் கவனத்திற்கொள்ளவில்லை. ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 37 வது கூட்டத் தொடரில் இலங்கை குறித்த விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருந்த நிலையில்தான், ஆனந்தசுதாகரனின் விவகாரம் இலங்கை ஊடகங்களில் பரபரப்பாக வெளியாகியிருந்தது.

ஆனந்தசுதாகரனின் விடுதலைக்காக இப்போது வடக்கு கிழக்கில் மட்டுமன்றி கொழும்பில் கூட போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. ஆனந்தசுதாகரின் விடுதலையை வலியுறுத்தி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்தைப் பெற்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. உண்மையிலேயே நாடாளுமன்றத்துக்குச் சென்றபின்னர் கூட்டமைப்பினர் செய்கின்ற உருப்படியான வேலை இதுவாகத்தான் இருக்கும். ஆனாலும் வெறும் கையெழுத்து வேட்டையோடு மட்டும் நிற்காமல், ஒட்டுமொத்த அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் காரியங்களில் கூட்டமைப்பு இறங்கவேண்டும். கூட்டமைப்புத் தலைமை கடந்த 3 வருடகாலமாகக் கடைப்பிடித்துவரும் "இணக்க அரசியல்" இராஜதந்திரமும் இந்த அவலங்கள் தொடர்வதற்கு ஒரு காரணம்.

இப்போது ஆனந்தசுதாகரனின் விவகாரத்தை கைகளில் எடுக்க வேண்டிய அவசியம் கூட்டமைப்புக்கு உள்ளது. அதற்குரிய சரியான தருணம் இது. ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு,மகிந்த பக்கம் தாவும் உறுப்பினர்கள், பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை என எந்தப் பக்கம் திரும்பினாலும் நெருக்கடி மட்டுமே அரசுக்கு மிஞ்சியுள்ளது. இந்த நெருக்கடிகளில் இருந்து ஓரளவுக்கேனும் மீள்வதற்கு தமிழ்க் கட்சிகளின் , குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு இப்போது அரசுக்கு அவசியமாகவுள்ளது. இந்தச் சமயத்தில் தான் கறக்க வேண்டியதைக் கறக்க வேண்டியதுதான். பேரம் பேசும் தந்திரம் முஸ்லிம் தலைமைக்குத் தெரிந்தளவுக்கு தமிழ்த் தலைமைகளுக்கு தெரியவில்லை. ஆயினும் தமக்கான சொகுசு வாகன வரிச்சலுகையும், இதரபடிகளையும் மட்டும் அவர்களுக்கு தருணம் பார்த்துக் கேட்டு வாங்குவதில் பின்நிற்பதில்லை. மக்களின் பிரச்சினைகளை மட்டும் நாடாளுமன்றத்துக்குள் சென்றவுடன் மறந்துவிடுவார்கள்.

முஸ்லிம்கள் மீதான கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டபோது, ஒட்டுமொத்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றமே ஸ்தம்பித்துப் போகுமளவுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் கூட்டாக இறங்கினர். ஒரு கட்டத்தில் நாடாளுமன்றின் மையத்தில் அமர்ந்திருந்தும் எதிர்ப்பை வெளிக்காட்டினர். அரசு இந்தக் கலவரத்தை அவசரமாக அடக்குவதற்கு அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பு நடவடிக்கையும் காரணம். அதேபோன்று அரசு பலவீனமாக இருக்கும்இந்தச் சந்தர்ப்பத்தில் தான் கேட்டதையெல்லாம் பெற முடியும் என்ற கணிப்பில், 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரும் முயற்சிகளில் ஜே.வி.பி முனைப்புக் காட்டியுள்ளது. எனவே இத்தகைய தருணங்களை இனியாவது பயன்படுத்த தமிழ் அரசியல்வாதிகள் முன்வரவேண்டும்.

அரசின் பங்காளியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு உடனடிப் பிரச்சினை, பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைதான். சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் ரணிலுக்கு எதிராகவே வாக்களிப்பர் என்பது உறுதியாகிவிட்டது. மேலும் சில உறுப்பினர்களை வளைத்துப் போடும்முயற்சிகளும் நடந்து வருகின்றன. எனவே ஐ.தே.க கலக்கத்தில் இருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பு என்ன கோரிக்கை வைத்தாலும் கண்ணை மூடிக் கொண்டு நிறைவேற்ற அது தயங்காது. எனவே பிரதமர் ஊடாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்து குறைந்த பட்சம் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ் அரசியல்வாதிகள் பயன்படுத்த வேண்டும். இந்த சந்தர்ப்பத்தையும் கூட்டமைப்பின் தலைமை பயன்படுத்தாவிட்டால், வரலாறு அவர்களை மன்னிக்கப்போவதில்லை.

அதேவேளையில், ஆனந்தசுதாகரனின் விவகாரத்தை ஒரு அடையாளமாக எடுத்துக்கொண்டு அரசியல் கைதிகள் விவகாரத்தில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான செயற்பாடுகளை புலம்பெயர்ந்த மக்களும் முன்னெடுக்க வேண்டும். புலம்பெயர் அமைப்புக்கள் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களின் முதலாவதாக இது இருக்கின்றது. சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தாக்கக்கூடிய விடயமாக ஆனந்தசுதாகரின் பிள்ளைகளின் மனிதாபிமானப் பிரச்சினை உள்ளது. இதனை திட்டமிட்ட முறையில் பயன்படுத்தி சர்வதேசத்தின் மூலம் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கு புலம்பெயர் அமைப்புக்கள் இனியும் தயங்கக்கூடாது என்பதை ஈழமுரசு வலியுத்துகின்றது.

- ஆசிரியர் குழு

தேசியத் தலைவரின் சிந்தனையிலிருந்து



நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக் கின்றோம், அதற்கு எமது வீரர்களின் இரத்தத் தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

-தேஶ்ரீசியத்தலைவர் அவர்கள்-

மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு
மாவீரர்களின் நினைவை ஈழமுரசில் பதிவு
செய்ய எமக்கு அனுப்பி வைக்கவும்



எங்களுக்காய் தங்கள் வாழ்வை
தியாகம் செய்த எம் தெய்வங்களை
தினமும் நினைவு கூருவோமாக.

ஈழமுரசு
CANADA EELAMURASU

எம்முடனான
தொடர்புகளுக்கு:
647-808-7766
647-408-8049



email: eelamurasu@yahoo.com

https://www.facebook.com/Eelamurasu-1400177629995000/

களத்தில்……

லெப்.ராதா

நிலையுடன் பெயர்:
லெப்டினன்ட் ராதா
நிலையான பெயர்:
சட்டநாதபிள்ளை கேதீஸ்வரன்
வீரப்பிறப்பு: 04.03.1974
நிலையான முகவரி:
5ம் வட்டாரம், திரியாய்,
திருகோணமலை
நிகழ்வு: 26.02.1992 வவுனியா பம்பைமடுச்சந்தியில் சிறீலங்கா படையினரின் சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் காயமடைந்த பின்னர் சயனைட் இருந்தி வீரச்சாவு.
மேலதிக விபரம்: கொடிகாமம் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

அவன் ஒரு வித்தியாசமானவன். தனது வாழ்நாளில் மட்டுமல்ல, மரணத்தின் பின்னும்தான் வித்தியாசமான வன் என்பதனை உணர்த்திவிட்டான். அவனது வாழ்நாள் அதிலும் போராட்ட வாழ்நாள் மிகவும் குறுகியதாக இருந்தாலும் வரலாற்று ஏடுகளில் அவனுக்கென்றொரு அத்தியாயம் எழுதப்பட்டு விட்டது.

எந்நேரமும் கள்ளமற்ற சிரித்த முகம். என்றும் துன்பதுயரங்களுக்கு ஆட்படாத மனஉறுதி. ஒவ்வொரு கணநேரமும் சுறுசுறுப்பான செயல்பாடு. அவன்தான் ராதா. அவன் கால்கள் தவழ்ந்து திரிந்த பூமி இன்று எனது கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருக்கின்றது. சிறீலங்கா அரசின் கோரப்பிடியில் சிக்குண்டு தவிக்கும் திருகோணமலையின் எல்லைக்கிராமங்களில் ஒன்றுதான் திரியாய் எனும் அழகிய சிறு ஊர். அது தான் ராதா பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து வளர்ந்த மண். மிகவும் வறுமையான குடும்பத்தில் பெற்றோரையும் ஒரேயொரு பெண் சகோதரியையும் பொறுப்பேற்க வேண்டிய நிலையில் ராதா இருந்தான். ஆம், அவன் வீட்டுக்கு ஒரேயொரு ஆண்மகன். ஆனால் அந்த நாட்களில் குடும்பப் பொறுப்பை ஏற்கக்கூடிய வயதை அடையாத அவன் அவ்வூர் பள்ளியில் கல்வி கற்று வந்தான்.

ஆனால், ராதாவின் வயதுக்கும், அவனது மனவளர்ச்சிக்கும், செயற்பாட்டிற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை. அந்த சிறிய கிராமத்தில் எந்த ஒரு பொது வேலையானாலும், எந்த ஒரு பொது நிகழ்வானாலும் அங்கே ராதாவைக் காணலாம். அவை ஒவ்வொன்றிலும் ராதாவின் முக்கிய பங்களிப்பு இருக்கும். கல்வி கற்கும் காலங்களிலேயே, அவனது சிந்தனைகள் பொதுவேலைகளில் நாட்டம் கொள்ள தொடங்கி விட்டன. அவன் வீட்டில் இருக்கும் நேரம் மிகக்குறைவு. அவனது பெற்றோரைப் பொறுத்தவரை அது அவனது குற்றமாகவும் இருந்திருக்கலாம். ஆனால், எந்நேரமும் சுறுசுறுப்பாக இருக்கும் அவனுக்கு இந்த செயல்பாடுகள் தேவையாக இருந்தன.

மெல்ல மெல்ல அவனது விடுதலைப் போராட்ட உணர்வு துளிர்விட்டு வளர ஆரம்பித்தது. ஈழமண்ணில் இந்திய இராணுவத்தினர் அராஜாகம் புரிந்து வந்த காலப்பகுதி அது. இந்திய இராணுவத்தினர் மீது முற்றுமுழுதான வெறுப்பும், எதிர்ப்புணர்வும் கொண்டிருந்த இவனும், இவனது பாடசாலை நண்பர்களும் தமது எதிர்ப்புணர்வைக் காட்டிக் கொண்டவிதம் சற்று வித்தியாசமானது. இவர்கள் கல்வி கற்று வந்த பாடசாலையில் நடந்த ஓர் பொது நிகழ்ச்சியில் பாவிப்பதற்கென ஓர் புதிய, பெரிய நைநோன் நில விரிப்பு அங்கிருந்த இந்திய இராணுவத்தினரால் வழங்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சி முடிவுற்றதும் இவனும், இவனதும் நண்பர்களும் சேர்ந்து அந்த நிலவிரிப்பைப் பலவேறு இடங்களில் கிழித்து சேதப்படுத்திய பின்னர் கொண்டு சென்று கொடுத்த பொழுது இந்திய இராணுவத்தினரால் எச்சரித்து அனுப்பப்பட்டனர். ஆந்த சிறுவயதில் அவனுக்கு இருந்த இந்த உணர்வுகள் தான் பின்னர் அவனது போராட்ட வாழ்க்கைக்கு வித்திட்டது எனலாம்.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டு வெளியேறிய காலப்பகுதியில் இவன் விடுதலைப் போராட்டத்தின் மீது முழுமையாக ஈர்க்கப்பட்டிருந்தான். அக்கிராமத்தில் இயங்கிய விடு தலைப்புரிகளின் நெருங்கிய ஆதர வாளனாகவும் உதவியாளனாகவும் செயற்பட்த் தொடங்கினான். அவ்வூர்ப் பாடசாலையில் புலிகளின் மாணவர் அமைப்பினை ஏற்படுத்துவதற்குத தானே முன்னின்று செயற்பட்டான்.

ஆனால், சிறிது காலத்தில் அவன் தன்னை முழுமையாகவே விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடுத்துவ தற்கு முடிவுசெய்துவிட்டான். தனது தாயாரைக் காப்பாற்றவேண்டிய தனது பொறுப்பைப் பற்றிஅ வன் சிந்திக்கவில்லை. ஏனெனில், தனது தாயாரைப் போன்று எத்தனையோ தாய்மார்கள் இருப்பதை அவன் நன்குணர்வான். தாய் திருநாட்டின் விடுதலையைத் தவிர வேறெதுவும் அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. அவன் தனது முடிவைச் செயற்படுத்தும் நோக்குடன் அப்பகுதி போராளிகளிடம் தனது முடிவைத் தெரிவித்தான். ஆனால் அவனது குடும்ப நிலையை நன்கு உணர்ந்த அவர்கள் ராதாவை இயக்கத்தில் இணைய அனுமதிக்கவில்லை. அவன் எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால், எதுவும் பலனளிக்கவில்லை. ஆனாலும், ராதா உறுதியாக இருந்தான். அவன் முடிவுகளை மாற்றிய பழக்கமில்லாதவன். தனது ஊரில் இருக்கும் வரை இயக்கத்தில் இணையமுடியாது என்பதனை தெளிவாக உணர்ந்தான். விளைவு, தனது நண்பன் ஒருவனுடன் ஊரைவிட்டு வெளியேறினான். முல்லைத்தீவு வந்து சேர்ந்த ராதாவும், அவனது நண்பனும் அங்கு தம்மை இயக்கத்தில் இணைத்துகொண்டனர். ஆம், ராதா மிகுந்த சிரமப்பட்ட பின்னரே தனது போராட்ட வாழ்க்கையை ஆரம்பிக்கின்றான்.

முல்லைத்தீவில் தனது பயிற்சியை முடித்துக் கொண்ட ராதா முல்லை மாவட்டத் தளபதி காந்தனின் குழுவுடன் சேர்க்கப்பட்டான். பயிற்சியின் போது இவனது திறமையை அவதானித்த மேஜர் காந்தன் தனது முகாமில் நடத்தப்பட்ட பயிற்சிப் பரிவுக்கு ராதாவை பயிற்ச்சியாளனாக நியமித்தான். அந்தப் பிரிவுக்கு பயிற்சி கொடுத்து முடித்த ராதா பின்னர் முல்லைத்தீவு இராணுவமுகாம் பகுதியில் இடம் பெற்ற பாரிய தாக்குதலில் பங்குபற்றிகையில் காயம் அடைந்து யாழ் வந்தடைந்தான். கையில் ஏற்பட்ட காயத்தினால் அவனது கை ஒருபக்கம் வளைந்துவிட்டது. சில மாதங்கள் யாழ்ப்பாணத்தில் நின்று தனது காயத்தை மாற்றிய ராதா பின்னர் வவுனியா பகுதிக்கு மாற்றப்பட்டான்.

மன்னார் - வவுனியா எல்லைப் பகுதிகளிலேயே இவன் இறுதிவரை செயற்பட்டான். இப்பகுதிகளில் இவன் குறுகிய காலமே செயற்பட்டபோதிலும் அப்பகுதி மக்கள் மத்தியிலும், போராளிகள் மத்தியிலும் மிகவும் பிரபல்யம் அடைந்தான். போராளிகள் அனைவராலும் மிகவும் அன்பாக நேசிக்கப்பட்டான். இவற்றுக்கொல்லாம் காரணம் அவனது சுறுசுறுப்பான செயல்பாடுகளும், திறைமையும் தான். அப்பகுதிகளில் நடந்த பல தாக்குதல்களிலும் இவன் பங்கேற்றான்.

எல்லாவற்றையும் விட முக்கியமானது என்னவென்றால் ராதாவின் பெயர் அப்பகுதி இராணுவத்தினர் மத்தியில் பரவலாக அடிபடத் தொடங்கியதாகும். ருாதாவின் திறமையைக் கேள்விப்பட்ட இராணுவத்தினர் அவனை உயிரோடு பிடிப்பதற்குத் திட்டமிட்டுப் பல முயற்சிகள் செய்தனர். இதனை அறிந்த சக போராளிகள் ராதாவிடம் இதைப்பற்றிக் கூறியபோது தனது இயற்கையான சிரிப்புடன் அதனை கேட்டுக்கொண்டான். இவ்வாறு தனது சக கோராளிகளுடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது ஒரு நாள் ராதா கூறினான், “நான் இராணுவத்தால் சுடப்பட்டு எனது உடல் இராணுவத்தால் எடுக்கப்பட்டாலும் சரி, அதற்கு முன் நான் இராணுவத்தின் ஒரு உடலையேனும் கைப்பற்றுவேன்” என்று உறுதியாகக் கூறினான்.

தனது சபதத்தை நிறைவேற்ற ராதா முழுமுயற்சி எடுத்தான். அவனது எண்ணம் நிறைவேறும் நாளும் வந்தது. 22-01-1992 இல் வவுனியா சமயபுர பகுதியில் நடமாடிய இராணுவத்தினர் பற்றி தனது தனியான முயற்சியின் மூலம் வேவு பார்த்து வவுனியா மாவட்டத் தாக்குதல் குழுவுடன் இணைந்து பதுங்கித் தாக்கி வெற்றி பெற்றதுடன் அத்தாக்குதலில் ஆறு இராணுவத்தின் உடல்களும் பல ஆயுதங்களும் கைப்பற்றப்படுவதற்குக் காரணமாக இருந்தான். இதனால், வன்னித் தளபதியினால் ராதாவிற்கு ரி 81 ரக துப்பாக்கி ஒன்று வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டான்.

இவ்வாறு, பல வீரமிகு செயற்பாடுகளால் ராதா புகழடைந்து வந்தவேளையில்தான் அந்த துயரச் சம்பவம் நடந்தது. எதிரிக்கு மட்டுமல்ல காலதேவனுக்கும் அவனின் வீரமிகு செயற்பாடு பிடிக்கவில்லை போலும். அவனும், அவனின் உயிரை பறிக்கத் திட்டம் தீட்டியிருந்தான். ஆனால், அதனை அறிந்து கொள்ளும் ஆற்றல் மட்டும் எமக்கு இருந்திருந்தால... அந்த கொடிய நாளில்... இராணுவத்தினர் தமது தாக்குதல் முயற்சியில் தோல்வியடைந்து பின்வாங்கிச் சென்ற வேளையில் அப்பகுதிக்குச் சென்ற ராதா இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த பின்னர் சயனைட் இருந்தி வீரச்சாவு எய்தினான். முரணித்த பின்னரும் சரித்திரம் படைத்த மாவீரர் வரிசையில் ராதாவும் ஒருவன். ஒரு போராளி தனது எதிரியினாலும் மத்திகப் பட்டவனாக இருந்தால் அதை விட அவனுக்கு புகழாரம் தேவையில்லை. ஆம், ராதாவின் உடலுக்கு கைப்பற்றிய இராணுவத்தினர் அவனின் உடலுக்கு எந்தச் சேதத்தையும் விளைவிக்காது அவன் அருகில் கிடந்த ஓர் அட்டையில் “போராளி” என்று எழுதிய மையோடு அவன் அணிந்திருந்த தகட்டினையும் அவனருகேயே விட்டுச் சென்றனர். ஆனாலும், அவன் மரணிக்க முன்னர் தனது சபதத்தை நிறைவேற்றி விட்டான். ராதா இன்று எம்மத்தியில் இல்லை. ஆனால், அவனின் சிரிப்பு, சொற்கள், சுறுசுறுப்பு எங்கள் மத்தியில் தவழ்ந்து கொண்டே இருக்கின்றன. அவன் எம்மத்தியில் இல்லை எனும் உணர்வு எமக்கு எற்பட இன்னும் பல காலமாகலாம்.




ஆம், அவன் வித்தியாசமானவன்.

வாழ்ந்தபோது மட்டுமல்ல மரணத்தின் போதும் அவன் வித்தியாசமானவன்.

-கே. கபில் - களத்தில் 07-05-1993

9ம் ஆண்டு நினைவாஞ்சலி


வீரஜனனம்		வீரமரணம்
23 . 06 . 1972		30 . 03 . 2009

லெப்.கேணல்.விக்ரர்

கந்தசாமி திவாகரன்
(கொக்குவில் மேற்கு, காரைநகர்)

ஆண்டு ஒன்பது சென்றாலும் ஆறவில்லை
எம்மனசு
மாண்புற வாழ்ந்த வாழ்க்கை மருவியே
அணைகிறதே
காண்பதே உன்தோற்றம் என்றும் கண்ணுள்
நிழலாடுதே
‘வீண்’ ஆமே எம் வருத்தம் விட்டிடவோ
முடியவில்லை
உலகம் உள்ளளவும் உன் புகழே நித்தம்
பாடிடுமாம்
நிழத்தின் விடுதலைக்காய் நீதிவழி மாறா
நிலமை மேற்கொண்டு
பலங்கொண்ட ‘விக்ரர்’ என பல்லோரும் அழைக்கும்
தகமையும் பெற்றாய்
கலங்கும் இதயத்தோடு கண்மணியே உம்நினைவே
ஆறாத்துயரதுவே

தகவல்:-
அம்மா, அக்கா குடும்பம்
(647) 537-6840



விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் அழிப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்களை ஏற்றிவரும் கப்பல் ஒன்று மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய குண்டு துளைக்காத 8 வாகனங்கள் ஆகியவற்றை தாம் கடலில் மூழ்கடித்து ஜலசமாதி செய்ததாக இலங்கை படையினர் அறிவித்துள்ளனர்.

இந்த எட்டு வாகனங்களும், புலிகளின் கப்பலும் இலங்கைக்கு மேற்குப் புற கடலில் மூழ்கடிக்கப்பட்டதாக கடற்படையின் பதில் பேச்சாளர் கே. கே. சி. உதயங்க ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த இந்த ''வெலின்'' என்ற கப்பல் அந்த அமைப்பின் சர்வதேச நடவடிக்கைகளுக்கான பொறுப்பாளராக இருந்த கே.பி. என்று அழைக்கப்பட்ட குமரன் பத்மநாதன் என்பவர் இலங்கை அரசாங்க படையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்தோனேசியாவில் இருந்து கைப்பற்றப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

கொஞ்சக் காலம் அதனை இலங்கை கடற்படையினர் பயன்படுத்தி வந்தனர். ஆனால், அது பழுதடையவே அதனை பயன்படுத்துவது கைவிடப்பட்டது. அது செயற்பட முடியாத நிலையை எட்டவே, தற்போது அதனை ஜலசமாதி செய்வது என்று இலங்கை அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

ரணிலிடமிருந்த மத்திய வங்கி மீண்டும் நிதி அமைச்சின் வசம்

ஜனாதிபதி மைத்திரியின் அதிரடி



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பின் கீழ் இருந்த இலங்கை மத்திய வங்கி மீண்டும் நிதியமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரதமரின் கீழ் இருந்த இலங்கை மத்திய வங்கியை மீண்டும் நிதியமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டு அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான முறுகல் நிலை உச்சமடைந்திருக்கும் பின்னணியிலேயே ஜனாதிபதி மைத்திரி இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றார். இரு தரப்பினருக்கும் இடையிலான உவுகளில் இந்த நடவடிக்கை மேலும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர்கள், எம்.பி.க்கள் வெளிநாடு செல்லத் தடை

ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் 06 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வெளிநாடு செல்கின்றமை தடைசெய்யப்பட்டுள்ளது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பிரதமருக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையைத் தோல்வியடையச் செவதற்கு வாக்களிக்கப்பட வேண்டியுள்ளதனால், இவர்களின் வெளிநாட்டுப் பயணம் இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளது எனக் கூறப் படுகின்றது.

தற்பொழுது, வெளிநாட்டுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளவர்களையும் நாடு திரும்பும் படி அறிவிக் கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ரணில் மீதான பிரேரணை மைத்திரி மந்திராலோசனை

பிரதமருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லா பிரேரணை குறி த்து ஆராய ஜனாதிபதி தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்தியகுழு இந்த வாரம் கூடவுள்ள நிலையில் சட்ட வல்லுனர்களை சந்தித்து சட்ட ஆலோசனைகளை பெற்றுகொள்ளவும் தயாராகின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகளையும் சந்தித்து நிலைப்பாடுகளை ஆராயவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்தகால நெருக்கடிகள், அரசாங்கத்தின் மீதான அதிருப்தி காரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை கூட்டு எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள நிலையில் அடுத்த வாரம் (4ஆம் திகதி) நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பும் பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

பிரேரணையினை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்பது குறித்து பிரதான கட்சிகளுக்கு இடையில் குழப்பகர நிலைமைகள் காணப்படுகின்றன. இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தும் வகையில் கட்சியின் மத்தியகுழு கூட்டம் ஜனாதிபதி தலைமையில் இந்த வாரம் கூடுகின்றது. இந்த வார இறுதிக்குள் தாம் கூடி ஆராய்வதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ள நிலையில் சட்ட நகர்வுகள் குறித்து ஆராய சட்ட வல்லுனர்களை ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

அத்துடன் ஏனைய கட்சிகளுடனும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து அவர்களின் நிலைப்பாடுகளையும் ஆராயவுள்ளனர். கூட்டு எதிர்க்கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லா பிரேரணையை மக்கள் விடுதலை முன்னணி ஆதரிக்கும் என தெரிவித்துள்ள நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன நிலைப்பாட்டில் உள்ளது என்பதை எதிர்வரும் 2 ஆம் திகதி பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் தெரிவிப்பதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆனந்த சுதாகரனுக்காக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டமும், கையெழுத்துச் சேகரிப்பும் இடம்பெற்றது.

குறித்த போராட்டம், நவதோயத் தலைவரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான எஸ்.ரீ.கிருஷ்ணா தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுதாகரனின் இரு சிறுவர்களுக்கும் கருணை காட்டி ஜனாதிபதிக்குள்ள விசேட அதிகாரத்தின் பிரகாரம் பொது மன்னிப்பு வழங்கி விடுதலைசெய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போது, பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி தமது கையொப்பங்களையும் பதிவு செய்தனர்.



காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடி 387வது நாளாக தொடரும் போராட்டம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி கடந்த வருடம் மார்ச் மாதம் 08 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து ஆரம்பித்த கவனவீர்ப்பு போராட்டம் இன்று 387 ஆவது நாளைக் கடந்து தொடர்கிறது.


வடக்கு, கிழக்கு தமிழர் தாயக ப கு தி களில் க ட ந் த கால த் தி ல் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட யுத்த காலப்பகுதியில் யுத்தப்பிரதேசங்களில் காணாமற்போன மற்றும் யுத்தம் முடிவடைந்து இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒரு வருடங்களை தாண்டிகாணாமற்போன உறவுகளின் போராட்டம் இடம்பெறுகின்றது. இந்த நிலையில், அண்மையில் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி கூட போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்திக்காது சென்றமை மேலும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தமது பிள்ளைகள் எங்கே? அவர்களுக்கு என்னநடந்தது? என்ற முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென மக்கள் தெரிவிக்கின்றனர். இதே வேளை அரசு தமக்கு எந்தத் தீர்வையும் தராது என்பதையும் சர்வதேச விசாரணையே தமக்கான தீர்வாக அமையும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

படைச் சிப்பாயிடம் துப்பாக்கி பறிப்பு!

முல்லைத்தீவில் துணிகரம்



முல்லைத்தீவு - ஆண்டாங்குளம் காட்டுப் பகுதியில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரிடம் இருந்து ஏகே-47 துப்பாக்கி ஒன்றை அடையாளம் தொரியாத நபர் ஒருவர் பறித்துச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் இடம் பெற்ற சட்டவிரோத மரக் கடத்தல் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த இராணுவத்தினர் முற்பட்டுள்ளனர்.

இதன்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் வைத்திருந்த ஏகே-47 துப்பாக்கியை மரம் கடத்த முற்பட்ட நபர் ஒருவர் பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ளார் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நபரை வலைவீசித் தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.



ஆனந்த சுதாகரனை விடுவிக்கக்கோரி முல்லைத்தீவில் கையெழுத்துப் போர்





அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை நிபந்தனையற்ற பொது மன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளுவர் புரம், தேராவில் போன்ற பிரதேசங்களில் கையயழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

மாணிக்கபுரம் இளங்கோபுரம் மற்றும் அதனை அண்டியபகுதி இளைஞர்களும் மூங்கிலாறு பகுதி மகளிர் அமைப்புக்களும் இணைந்து இந்த கையயழுத்து சேகரிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந் த நிலையில் , பு து க்குடியிருப்பு பிரதேச சபைக்குத் தெரிவான உறுப்பினர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக ஏற்பாடுகளும் இதன் போது மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் கடந்த வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்த ம் ஆன ந் த சு தாக ர னி ன் மனைவி ஆனந்த சுதாகர் யோகராணி கடந்த 15 ஆம் திகதி சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

இவரின் இறுதிக் கிரியைகள் கிளிநொச்சி, மருதநகர் கிராமத்தில் இடம்பெற்றபோது மனைவியின் இறுதிக் கிரியைகளில்கலந்து கொள்வதற்காக பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மூன்று மணி நேரமே கால அவகா சம் வழங்கப்பட்டு மனைவியி ன் ம ர ண ச் ச ட ங் கி ல் கலந்து கொண்ட பின் மீண்டும் பொலிஸாரால் சிறைச்சாலை வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன் போது தந்தை சிறைச்சாலை வாகனத்தில் ஏறியபோது அவரது மகளும் தந்தையுடன் சிறைச் சாலை வாகனத்தில் ஏறியச ம் ப வ ம் அனைவரது மனதையும் நெகிழ வைத்துள்ளது. நீதிமன்றின் ஊடாக 97 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான ஆனந்தசுதாகருக்கு மகனும் மகளும் என இரு பிள்ளைகள் உள்ளனர்.

தந்தை கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பின்னர் தாயின் அரவணைப்பில் வாழ்ந்த இரண்டு பிள்ளைகளும் தற்போது தந்தையையும் தாயையும் இழந்த நிலையில் உள்ளமை குறிப்பி டத்தக்கது. எனவே, இவரை நிபந்தனையற்ற பொது மன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்யுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற் கமைய இ ந் த கையயழுத்து சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர், உறுப்பினர்களின் கையெழுத்துடன் சுதாகரனின் விடுதலை கோரி கருணை மனு

அரசியல் கைதி ஆனந்தசுதாகரனை விடுதலை செய்யக்கோரி வடமாகாண சபையினால் கருணை மனு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதியமைச்சர் ஆகியோருக்கு நேற்று அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. இந்த மனுவில் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட 38 உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.


அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரன் 2008 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக் கப்பட்டுள்ளார். அண்மையில் அவருடைய மனைவி உயிரிழந்ததை தொடர்ந்து மரண சடங்கிற்காக அழைத்துவரப்பட்டு அவர், திருப்பி அழைத்து செல்லப்பட்ட போது சுதாகரனின் மகள் தந்தையுடன் சிறைச்சாலை பேருந்தில் ஏறியிருந்தமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது.

இதனை தொடர்ந்து சுதாகரனின் விடுதலைக்காக பல்வேறு சாத்வீக வழி போராட்டங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. இதன்படி நேற்று நடைபெற்ற மாகாண சபையின் அமர்வின்போது அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், சுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யக்கோரி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கு சபையினால் கருணை மனு ஒன்றை அனுப்புவதற்கு திட்டமிட்டுள்ளதாக கூறியதுடன், சகல உறுப்பினர்களும் அந்த கருணை மனுவில் கையொப்பமிட்டு அவருடைய விடுதலைக்காக உதவவேண்டும் என கேட்டுக் கொண் டார்.

இதற்கமைய தேநீர் இடை வே ளை யின் போது முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட 38 உறுப்பினர்களும் கருணை மனுவில் கையொப்பமிட்டுள்ளனர்.இந்த கருணைமனு திட்டமிட்டபடி ஜனாதிபதி, பிரதமர், நீதியமைச்சர் ஆகியோருக்கு வடமாகாண சபையினால் அனுப்பிவைக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.

ஈபிடிபி.யினருடன் இணைந்து கூட்டமைப்பு சுயநல அரசியல்

விக்கினேஸ்வரன் கடும் குற்றச்சாட்டு



உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி.யின் ஆதரவினைப் பெற்றுக் கொண்டமை சுயநலத்துக்காக கூட்டமைப்பு கொள்கையைக் கைவிட்டுவிட்டது என்பதையே எடுத்துக் காட்டுகின்றது என்று வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். கந்தர்மடம் அரசடி வீதியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தின் திறப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அலுவலகத்தினை திறந்து வைத்த முதலமைச்சரிடம் உள்ளூராட்சி மன்றங்களில் ஈ.பி.டி.பி கட்சியுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து வருகின்றமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஈ.பி.டி.பி கட்சியுடன் தாங்கள் பேரம் பேசவில்லை என்றும், ஈ.பி.டி.பி தமக்கு நேரடியான ஆதரவு தரவில்லை என்று ஊடகங்களுக்கு கூறியுள்ளார். ஆனால் என்னதான் இருந்தாலும் கட்சியின் ஒருமித்த கருத்துடன் நியமனங்கள் இடம்பெறவில்லை என்று தெரிகின்றது.

என்னதான் இருந்தாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பி கட்சியின் ஆதரவுடன் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை அமைப்பது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொள்கைகளை கைவிட்டுள்ளது என்றும், சுயநலமே கட்சிக்கு முக்கியம் என்ற கருத்தும் மக்களிடம் ஏற்படும் என்பதுதான் என்னுடைய கருத்து என்றும் அவர் தெரிவித்தார்.



ஈ.பி.டி.பி.யினரை நான் விமர்சிக்கவேயில்லை

மாவை சேனாதிராஜா சொல்கிறார்



''ஈ.பி.டி.பி.யை எபோதும், எங்கேயும் நான் விமர்சிக்கவும் இல்லை. அவர்கள் ஒட்டுக் குழு என்ற வார்த்தைகளை நான் ஒரு காலமும் பேசியதுமில்லை. அத்தோடு இப்போது ஈ.பி.டி.பி.யுடன் நாங்கள் கூட்டுச் சேரவும் இல்லை இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமனற் உறுபப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சி சபைகளில் ஈ.பி.டி.பி.யின் ஆதரவுடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி தங்களது உறுப் பினர்களை மாநகர முதல்வராகவும், நகர மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளராகவும் கூட்டமைப்பு நியமித்து வருகின்றது.

இந்நிலையில் கடந்த காலங்களில் ஈ.பி.டி.பி.யை விமர்சித்தும் அவர்களை ஒட்டுக் குழுவென்றும் சொல்லிவந்த கூட்டமைப்பினர், தற்போது அவர்களுடன் சேர்ந்து ஆட்சிமையத்து வருவதால் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என ஊடகவியலாளர்கள் மாவை சேனாதிராசாவிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலையே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

''நீங்கள் சொன்ன ஒட்டுக்குழு என்ற வார்த்தைகளை நான் ஒரு காலமும் பேசவில்லை. ஆயினும் வேறு யாராவது பேசியிருக்கலாம். இப்போது நாங்கள் ஈ.பி.டி.பி.யுடன் கூட்டுச் சேரவில்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 56 சபைகளில் கூட்டமைப்பு போட்டியிட்டது. இதில் 40 சபைகளில் தனித்தபெரும்பான்மை கொண்ட கட்சியாக கூட்டமைப்பு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டோம். ஆனாலும் அதிலும் சில பின்னடைவுகள் எங்களுக்கு இருக்கத் தான் செய்கின்றன.


இந்த தேர்தல் முறையிலும் சரி, நடைமுறையிலும் சரி பெரும்பான்மைத்துவத்தை நாங்கள் பெற்றாலும் எதிர்காலத்தில் அந்தச் சபை நிர்வாகத்தை சரியான முறையில் நடத்தவதற்கு எல்லோருக்கும் நாங்கள் ஒரு அழைப்பைவிட்டிருந்தோம். எந்தெந்தச் சபைகளில் எந்தக் கட்சி கூடிய பெரும்பான்மையைப் பெற்றதோ அந்தந்தச் சபைகளில் அவர்கள் ஆட்சிமையப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று பகிரங்கமாகக் கேட்டிருந்தோம்'' என்று மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

பேசுவதற்கான எனது உரிமை சம்பந்தனால் மீறப்படுகின்றது

சிவசக்தி ஆனந்தன் சபாநாயகருக்கு கடிதம்

பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் தன்னுடைய பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்படுவதாகவும், எதிர்க்கட்சி தலைவர் தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்றத்தில் தான் உரையாற்றுவதற்கு அனுமதி மறுத்துவருவதாகவும் , தனது பாராளுமன்ற சிறப்புரிமையை பாதுகாத்து தருமாறும் கோரி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் .சிவசக்தி ஆனந்தன் சபாநாயகருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நான்கு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அதில் நான் செயலாளராகச் செயற்படும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஒன்றாகும். நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு



செய்து ஒரே அமைப்பாக செயற்படுமாறு பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளோம். எனினும் அங்கத்துவக் கட்சிகளுக்கென்று தனித்துவம் உள்ளது. ஒவ்வொரு கட்சியும் அதனதன் தனித்துவவத்தைப் பேணவேண்டும் என்று காரணம் கூறி எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனால் எமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வருகின்றது.

அண்மைக் காலங்களில் தமிழரசுக் கட்சியினர் கூட்டமைப்பின் பெயரால் எடுக்கின்ற கொள்கை முடிவுகளும் செயற்பாடுகளும் எம்மை தொடர்ந்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்க முடியாத நிலைக் குத் தள்ளியுள்ளது. இதனால் எதிர்க்கட்சித் தலைவர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் நான் உரையாற்றுவதற்கு அனுமதி மறுத்துவருகிறார். இச்செயல் பாராளுமன்ற உறுப்பினரான எனது சிறப்புரிமையை மீறுவதுடன், வன்னி மக் களின் குரல்வளையை ஒடுக்குவதாகவும், ஜனநாயக விழுமியங்களை அவமதிக்கும் செயலாகவும் அமைந்துள்ளது.

சிங்களக் குடியேற்றம் குறித்து ஆராய மாகாண சபை அமர்வு

மகாவலி எல் வலயம் என்ற போர்வையில் முல்லைத்தீவு மாவட்டத் தில் முன்னெடுக்கப்படும் சிங்களக் குடி யேற்றத்தைத் தடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபையில் சிறப்பு அமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறும் என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் அறிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 119 ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றத்தை கட்டுப்படுத்துவது தொடர்பாக பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் ஒன்றை முன்வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ள பல முனைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றை உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரினார். முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மற்றும் தமிழர் பரம்பல் அழிக்கப்படுவது தொடர்பாக பல தடவைகள் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் பேசியுள்ளார்.

மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரையும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒரு தடவையாவது வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுப்படவில்லை. இந்த விடயத்தை நாம் மட்டும் பேசிப் பயனில்லை. எமது நாடாளுமுன்ற உறுப்பினர்களிடம் கொண்டு செல்ல வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாம் முல்லைத்தீவில் ஏற்படுத்தப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய சிறப்பு அமர்வு ஒன்றை நடத்த வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் குருகுலராஜா தெரிவித்தார். அவரது கோரிக்கையை ஏற்ற அவைத் தலைவர் எதிர்வரும் 5 ஆம் திகதி சிறப்பு அமர்வு இடம்பெறும் என அறிவித்தார்.

ஜெனிவா அரசியல் 2018



யதீந்திரா



2009இல் யுத்தம் நிறைவுற்றதைத் தொடர்ந்து தமிழர் அரசியலுக்கு அறிமுகமான ஒரு புதிய சொல்தான் ஜெனிவா. அது இன்றுவரை ஒவ்வொரு ஆண்டும் ஏதோ புதிதாக பிறந்த குழந்தை மாதிரி குதுகலத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. 2012இல் அமெரிக்காவின் அனுசரனையுடன் இலங்கை மீது ஒரு பிரேரணை கொண்டு வரப்பட்டது. அந்தப் பிரேரணையைத் தொடர்ந்தே இலங்கை அரசியலிலும் தமிழ்த் தேசிய அரசியலிலும் ஜெனிவா என்னும் சொல் ஒரு கவர்ச்சிமிக்க சொல்லாக மாறியது. 2012இல் குறித்த பிரேரணை வெளியானபோது அதனை பொதுவாக இலங்கைக்கு எதிரான அமெரிக்கப் பிரேரணை என்றே பலரும் அழைத்தனர். ஆனால் உண்மையில் அது இலங்கைக்கு எதிரான பிரரேரணை அல்ல மாறாக இலங்கை மீதான பிரேரணை. அமெரிக்கப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட ஒரு சில மணித்தியாலத்தில் அப்போது அமெரிக்காவின் இராஜங்கச் செயலராக இருந்த கிலாரி கிளின்டன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அமெரிக்காவும் சர்வதேச சமூகமும் இலங்கைக்கு ஒரு வலுவான சமிக்ஞையை வழங்கியிருக்கின்றது அதாவது இலங்கை நின்று நிலைக்கக் கூடிய சமாதானத்தை அடைய வேண்டுமென்றால், அதற்கு உண்மையான நல்லிணக்கமும் பொறுப்புக் கூறல் முறையும் அவசியம். ஆனால் அமெரிக்காவின் வலுவான சமிக்ஞையை மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. ஒரு வேளை ராஜபக்ச அதற்கு செவிசாய்த்திருந்தால் இப்போது ஜெனிவா தமிழர்களுக்கு கவர்ச்சியான ஒன்றாக இருந்திருக்காது. மேற்குலகிற்கு சவால் விடும் வகையிலான ராஜபக்சவின் அனுகுமுறை பிறிதொரு புறத்தில் கொழும்பின் மீதான அழுத்தங்கள் தொடர்வதற்கான புறச்சூழலை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டிருந்தது. இந்த அழுத்தங்கள் அதிகரிக்க அதிகரிக்க இலங்கைக்குள் சீனாவின் உள்நுழைவும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

இவ்வாறானதொரு சூழலில்தான் 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜெனிவா அரசியல் வேறு ஒரு தளத்திற்குச் சென்றது. அதாவது, ஜெனிவா அரங்கை முற்றிலுமாக எதிர்த்து நிற்கும் மகிந்தவின் அனுகுமுறைக்கு மாறாக, ஜெனிவாவை ஏற்றுக் கொண்டு பயணிக்கும் புதிய அணுகுமுறை ஒன்றை புதிய அரசாங்கம் கடைப்பிடித்தது. இதன் விளைவாகவே 2015இல் நிறைவேற்றப்பட்ட 30.்.1 தீர்மானத்திற்கு கொழும்பு இணையனுரசனை வழங்கி அதனை அமுல்படுத்துவதாக வாக்குறுதியளித்தது. அந்தப் பிரேரணையே மீளவும் 2017இல் உறுதிப்படுத்தப்பட்டு, அதனை அமுல்படுத்துவதற்கு மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசமும் வழங்கப்பட்டது. ஆனால் அரசாங்கம் வாக்குறுதியளித்தது போன்று அவற்றை நிறைவேற்றவில்லை என்பதுதான் தற்போதை ஜெனிவா அரசியல்.

மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் ஆணையளரின் எழுத்து மூல இடைக்கால அறிக்கையை தற்போது பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. குறித்த அறிக்கையில் ஆணையாளர் தெரிவித்திருக்கும் பின்வரும் பந்தி நமது கவனத்திற்குரியது : "ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் பணியகத்துடன், ஆக்கபூர்வமான தொடர்புகளை சிறிலங்கா அரசாங்கம் பேணி வருவது மற்றும் பேரவையின் சிறப்பு அறிக்கையாளர்களின் பயணங்களுக்கான ஒத்துழைப்புக்களை வழங்குவது உள்ளிட்ட, மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் இணங்கிச் செயற்படுவதை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகம் வரவேற்கிறது எனினும், சிறிலங்காவில் நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை உருவாக்கும் விடயத்தில் மெதுவான முன்னேற்றங்களே நிகழ்ந்திருப்பது, குறித்து ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகம் அதிக கவலையைக் கொண்டுள்ளது.

எந்த சட்ட வரைவுகளும் பகிரங்கப்படுத்தப்படாத நிலையிலும், அதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையிலும், நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் தொடர்பாக, எதிர்வரும் 2019 மார்ச் மாதத்துக்குள் 30.்.1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது சந்தேகமே" - 2019 மார்ச்சிக்குள்ளும் விடயங்களை நடைமுறைப்படுத்துவது சந்தேகமெனின் மனித உரிமைகள் பேரவையில் மேலும் கால அவகாசம் தொடர்பான விவாதமொன்று இடம்பெறப் போகின்றதா? அவ்வாறானதொரு நிலைமை ஏற்படின் தமிழர் தரப்பின் முக்கியமாக சம்பந்தன் - சுமந்திரன் தரப்பின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? சம்பந்தன் - சுமந்திரன் தரப்பு என்பதில் தற்போது கத்தோலிக்க மதகுரு இம்மானுவல், சுரேன் சுரேந்திரன் ஆகியோரும் சேர்ந்திருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில்தான் மேற்குலக ராஜதந்திரிகளை சந்திக்கும் சுமந்திரன் தலைமையிலான குழுவில், பாதர் இம்மானுவல் சுரேன் சுரேந்திரன் ஆகியோர் இடம்பெற்றிருக்கின்றனர். இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருக்கும் சுமந்திரன், இலங்கை தொடர்பில் கடுமையான நிலைப்பாட்டை எடுக்குமாறு அமெரிக்காவை கோரியதாக தெரிவித்திருக்கின்றார். ஆனால் இதே சுமந்திரன்தான் கடந்த ஆண்டு சிறிலங்காவிற்கு கால அவகாசம் வழங்குவது தொடர் பான விவாதங்களில் ஆதரவாக செயற்பட்டிருந்தார். உண்மையில் குறித்த கால அவகாசத்தை அரசாங்கம் சரியாக பயன்படுத்தியிருக்கவில்லை. தென்னிலங்கையில் இதற்கு சாதகமான சூழலும் இருந்திருக்கவில்லை. அதற்கு அப்பால், ஜனாதிபதியிடமோ, பிரதமர் ரணில் விக்கிரசிங்கவிடமோ தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்றுவற்கான தற்துனிவும் இருந்திருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் கூட்டரசாங்கத்தின் பலவீனத்தை தெளிவாக படம்பிடித்திருந்தது. இந்த நிலையில் 2019 மார்ச்சிக்குள் முன்னேற்றங்களை காண்பிப்பது சாத்தியமான ஒன்றா?


நிலைமைகளை அவதானித்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மேற்குலகத்தினதும் இந்தியாவினதும் விருப்புக்குரிய அரசாங்கத்திற்கு சாதகமாக இருந்திருக்கவில்லை. எவரை ஆட்சியிலிருந்து வெளியேற்றும் நோக்கில் இந்த அரசாங்கம் கொண்டுவரப்பட்டதோ, அந்த அரசாங்கத்தினது இருப்போ நாளுக்கு நாள் கீழ் நிலைக்கு சென்றுகொண்டிருக்கிறது. இது இலங்கைத் தீவின் அரசியலை தங்களின் நலனில் நின்று நோக்கும் சக்திகளுக்கு ஒரு எச்சரிக்கையாகயும் மாறியிருக்கிறது. எனவே இவ்வாறானதொரு சூழலில் கூட்டரசாங்கத்தால் எந்தவொரு விடயத்தையும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. இதனை விளங்கிக் கொள்ள நாம் அதிக நேரத்தை செலவிட வேண்டியதில்லை. 2020 இல் ஒரு புதிய தேர்தலுக்கு முகம் கொடுக்கவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ எந்தவொரு சிக்கலான விடயத்தையும் இனித் தீண்டப் போவதில்லை. இந்த இடத்தில் தமிழர் தரப்பினர் என்ன செய்யப் போகின்றனர்?

குறிப்பாக கூட்டமைப்பு என்ன செய்யப் போகின்றது? ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் ஏதோவொரு வகையில் அரசாங்கத்தை பாதுகாக்கும் செயற்பாடுகளைத்தான் சம்பந்தன் தரப்பினர் மேற்கொண்டு வந்தனர். சர்வதேச அளவிலும் அரசாங்கத்தை பாதுகாப்பதிலேயே சுமந்திரனின் பிரச்சாரங்கள் அமைந்திருந்தன. சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் மனித உரிமைவாதிகளும் எதைக் கூறிய போதிலும் இறுதியில் மக்கள் பிரதிநிதி என்னும் வகையில் சுமந்திரனின் கருத்துக்களே தமிழ் மக்களின் கருத்துக்களாக சர்வதேச அரங்கிற்குச் சென்றது. தற்போதும் அதுதான் நிலைமை. உண்மையில் ஜெனிவா அரங்கு தொடர்பில் தமிழர் தரப்பிடம் ஒரு கொள்கை நிலைப்பாடு இருக்க வேண்டும். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நாளிலிருந்து மைத்திரிபாலவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒரு விடயத்தை தொடர்ந்தும் வலியுறுத்தி வருக்கின்றனர். அதாவது, இலங்கை படையினர் எந்தவொரு போர்க் குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை. நாம் எந்தவொரு வெளிநாட்டு தலையீட்டுக்கும் இடமளிக்க மாட்டோம். போர்க் குற்றங்கள் தொடர்பில் இதுதான் அவர்களது நிலைப்பாடு என்றால் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? இன்று நிலைமைகள் பாதமாகிக் கொண்டு செல்கின்றது என்றவுடன் சம்பந்தர் மீண்டும் சர்வதேசம் பற்றி பேசுகின்றார். விடயங்கள் அனைத்தையும் குறைவாக மதிப்பிட்டதன் விளைவுதான் இது. இலங்கைக்குள் ஏற்பட்டிருக்கும் நிலைமையை சரியாக மதிப்பீடு செய்யாமல் மேலும் அடியெடுத்து வைத்தால் தமிழரின் அரசியல் இருப்பு மேலும் பலவீனமடைவது நிச்சயம். இனி நடக்கப் போகும் அனைத்து விடயங்களும் 2020 தேர்தலை மையப்படுத்தித்தான் நகரும். இந்த நகர்வில் தமிழர் தரப்பு மீண்டும் சிக்கிக் கொள்ளப் போகிறதா அல்லது அதனை புத்திசாதுர்யமாக கையாளப் போகிறதா? ஒரு வலுவான தமிழ்த் தலைமையொன்று இல்லாவிட்டால் மீண்டும் பழைய கதைதான் தமிழர்களுக்கு கிடைக்கும்.





B W K
BRIGHT WOOD KITCHEN & FLOORING
Dream of your style
FREE ESTIMATE & 3D PICTURE DEMO
QUALITY, FLEXIBILITY, AFFORDABILITY
CUSTOM KITCHEN & VANITY
Thermafoil Doors (Medium Density Fibreboard) / Wood Doors (Oak, Maple, Cherry)
Standard Hardware (Door Handles, Knobs) / Decorative Accents
Glass insert options (clear glass, clear glass with mullions, etched glass and beveled glass)
Granite & Quarts (Kitchen Countertops) / Solutions for the Kitchen, Bath & Beyond
Cell: 416.754.2844 | Tel: 416.321.2844
bwkflooring@gmail.com | www.brightwoodkitchen.com | Fax: 416.291.2844
300 Tapscott Road, Unit 1, Scarborough ON M1B 2Y0. | facebook.com/brightwoodkitchen/

ஸ்ரீலங்கா செய்திகள்



ரணில் மீது மனோ கடும் சீற்றம் துரோம் செய்வதாகவும் சாடல்



பிரதமர் ரணில் விக்ரம சிங்கவுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு, எதிராக வாக்களிக்கும் மனநிலையிலேயே தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ள தாக தேசிய சகவாழ்வு கலந்து ரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தலவாக்கலையில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ''ஆளும் கட்சியின் பங்காளியாக நாம் இருக்கின்ற போதிலும் ஐக்கிய தேசிய கட்சி துரோகம் இழைப் பதால் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு முடிவு ஒன்றை எடுக்க நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

எங்கள் கட்சிக்கும், அந்தக் கட்சிக்கும் இடையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின் றன. உள்ளூட்சித் தேர்தலின் போது பல இடங்களில் உறுதியளிக்கப் பட்ட பட்டியலின்படி அங்கத்து வங்கள் தராமல் ஐக்கிய தேசிய கட்சி துரோகம் செய்துள்ளது. கொழும்பில் மட்டுமல்லாது நுவரெலியாவிலும் இரண்டு, மூன்று ஆசனங்களை எங்க ளுக்கு தராமல் ஐக்கிய தேசிய கட்சி ஏமாற்றியுள்ளது.

இதற்கு அவர்கள் உரிய பதில் கூற வேண்டும். உரிய பதில் கிடைத்தால் மாத்திரமே நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைதொடர்பில் தீர்மா னிப்போம். நல்ல எண்ணம், கௌரவமான நடத்தை ஐக் கிய தேசிய கட்சிக்கும் இருக்க வேண்டும். அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

ரணில் மீது நம்பிக்கையில்லா பிரேரணை 4 ம் திகதி விவாதிக்க தயாராகும் கட்சிகள்


ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவரும் பிரதம ருமான ரணில் விக்கிரமசி ங்கவிற்கு எதிராக சமர்ப்பிக் கப்பட்டுள்ள நம்பிக்கையில் லாப் பிரேரணை தொடர்பில் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் தொடர்ந்து அரசியல் காய் நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றன.

எதிர்வரும் 4ஆம் திகதி பிரதமருக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணை விவாதிக்கப்படவுள்ள நிலை யில் அன்றைய தினம் என்ன நடக்கப்போகின்றது என் பது தொடர்பிலேயே தற் போது தேசிய அரசியலில் பரவலாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. ஐக்கியதேசியக் கட்சியினர் தாம் இந்த நம்பிக் கையில்லாப் பிரேரணையில் வெற்றியடைவோம் என மிக வும் திட்டவட்டமாக தெரி வித்து வருகின்றனர்.

அதாவது இந்த நம்பிக் கையில்லாப் பிரேரணையின் மூலம் ஐக்கியதேசியக்கட் சியானது அரசியலில் ஒரு நிலையான திருப்புமுனையை அடையும் என மிகவும் உறுதி யான முறையில் ஐக்கியதேசி யக்கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் தமக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பினரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி யினரின் ஒரு பிரிவினரதும் ஆதரவு கிடைப்பது உறுதி என்றும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றிகொள் வோம் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.

மறுபுறம் நம்பிக்கையில் லாப் பிரேரணையை சமர்ப்



பித்துள்ள கூட்டு எதிர்க்கட் சியானது இந்த முயற்சியில் தாம் பாரிய வெற்றியை அடைவோம் என தெரிவித்து வருகின்றது. நம்பிக்கையில் லாப் பிரேரணைக்கு ஐக்கிய தேசியக்கட்சிக்குள்ளேயே அதிகமானனோரின் ஆதரவு கிடைக்கும் என்றும் கூட்டு எதிர்க்கட்சியினர் கூறிவருகின் றனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி இதுவரை உத்தியோகப்பூர்வ மான நிலைப்பாட்டை அறி விக்கவில்லை. எப்படியிருப் பினும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரே ரணை மீதான வாக்கெடுப்பின் போது சுதந்திரக்கட்சியினர் இரண்டாக பிளவுபடும் அபா யம் உள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை நம்பிக்கை யில்லாப் பிரேரணை விவகா ரத்தில் திருப்புமுனையான நிலைப்பாட்டைக் கொண்டி ருக்கின்ற தமிழ் தேசியக்கூட் டப்பைபானது எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூடி தீர்மா னிக்கவுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பானது நம்பிக் கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்கும் என ஐக்கியதேசியக்கட்சி நம்பிக் கொண்டிருக்கும் சூழலில் அதுதொடர்பான இராஜதந் திர நகர்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

அதேபோன்று கூட்ட மைப்பின் ஆதரவைப் பெற் றுக்கொள்ளும் நோக்கில் ஐக் கியதேசியக்கட்சியும் கூட்டு எதிரணியும் கடும் முயற்சி களை முன்னெடுத்து வரு கின்றன. தற்போதைய நிலை மையில் பாராளுமன்றத்தில் ஐக்கியதேசியக்கட்சிக்கு 107 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அதில் பாராளுமன்ற உறுப் பினர்களான விஜயதாஸ ராஜ பக்ஷவும் அத்துரலிய ரத்தின தேரரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெ டுப்பின் போது எவ்வாறான முடிவை எடுப்பார்கள் என் பது குறித்து இதுவரை வெளிப் படுத்தவில்லை.

அதேபோன்று இந்த ஐக் கியதேசியக்கட்சி வசமுள்ள 107 எம்.பி.க்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 7 உறுப் பினர்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 5 உறுப் பினர்களும், தமிழ் முற் போக்கு கூட்டணியின் 6 உறுப்பினர்களும் இடம்பெ றுகின்றனர். மறுபுறம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வசம் 95 எம்.பி.க்கள் உள்னர்.

அதில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தரப்பிடம் 42 எம்.பி.க்கள் உள்ளனர். மஹிந்த ராஜபக்ஷ தரப்பின ரிடம் 53 எம்.பி.க்கள் உள்ள னர். அதேபோன்று தமிழ் தேசிய கூட்டமைப்பு வசம் 16 எம்.பி.க்களும் ஜே.வி.பி. வசம் 6 எம்.பி.க்களும் உள்ள னர். அதேபோன்று ஈ.பி.டி.பி. வசம் ஒரு எம்.பி. பதவியும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.


இலங்கைத் தேர்தல்களில் இந்தியாவின் செல்வாக்கு

நாமல் ராஜபக்ஷ சொல்கின்றார்

இலங்கை தேர்தல்களில் இந் தியாவின் வகிபாகத்தைப் புறக் கணிக்க முடியாது என நாடா ளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

''பிராந்திய அரசியலில் இந் தியா முக்கியமானது. அத்து டன், இலங்கைக்கும் இந்தியா வுக்கும் இடையில் பல்வேறு துறைகளில் பரஸ்பர ஈடுபாடு கள் உள்ளன. இந்த நிலையில், இந்தியாவின் செல்வாக்கையும், இந்தியாவையும் நாம் புறக்க ணிக்க முடியாது.

இந்திய உயர்ஸ்தானிகர் சிறிசேனவுக்கு ஆதரவாக



இருந்ததாக சில ஊடகங்கள் தெரிவித்திருந்தன. எனினும், இதற்கு அவர்கள் பொறுப்புக் கூறவேண்டும் என நாம் கூற வில்லை. ஆனால், சில செயற் பாடுகள் மற்றும் அறிக்கைகள் (கடந்த தேர்தலில்)நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன என மக்கள் நம்புகின்றார்கள்'' என்றும் நாமல் ராஜபக்ச குறிப் பிட்டுள்ளார்.

உதயங்கவை அழைத்துவர இராஜதந்திர நடவடிக்கை

டுபாயில் வைத்து கைது செய்யப்பட்ட ரஷ் யாவிற்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுயங்கவை இராஜதந்திர முறை யில் இலங்கைகு அழைத்து வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டுபாயில் இருந்து வெளியேற உதயங்கவுக்கு தடை உள்ள நிலையில் அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் பொலிஸ் தலைமையகத்துக்கு கிடைக்கப் பெற் றுள்ள நிலையில், பெரும்பாலும் மிக் விமான கொள்வனவின் போது இடம்பெற்ற மோசடி தொடர்பிலேயே கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூது வர் உதயங்க வீரதுங்க டுபாயில் வைத்து கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி முதன் முறையாக கைது செய்யப்பட்ட நிலையில் அவரை இலங்கைக்கு அழைத்து வர பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி இரு சிறப்புக் குழுக்கள் டுபாய் சென்றன.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் யசந்த கோதாகொட, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்தியல்ங்கார உள்ளிட்ட 7 பேர் கொண்ட குழுவினரே இவ்வாறு அவரை இலங் கைக்கு அழைத்துவரும் முயற்சியாக டுபாய் சென்றனர். எனினும் பெப்ரவரி 8 ஆம் திகதி டுபாய் அதிகாரிகள் உதயங்கவை விடுதலை செய்ததுடன் அழைத்து வர சென்ற குழு 16 ஆம் திகதி வெறுங்கையுடன் நாடு திரும்பியது.

பின்னர் பெப்ரவரி 19 ஆம் திகதி மேலதிக செ ாலிசிட்டர் ஜெனரால் யசந்த கோதாகொட, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் பி.கே.டி. பிரியந்த உள்ளிட்ட சிறப்புக் குழுவொன்று மீளவும் உத யங்கவை நாட்டுக்கு அழைத்துவரும் முயற்சியாக டுபாய் சென்றது. எனினும் அந்த முயற்சி வெற்றி யளிக்கவில்லை. இந் நிலையிலேயே நேற்று முன் தினம் உதயங்க வீரதுங்க டுபாய் விமான நிலையத் தில் வைத்து மீளவும் கைது செய்யப்பட்டுள்ளார்.



Ontario இல் GTA க்கு இணையாக மிக வேகமாக வளர்ந்து வரும்
Waterloo வில் 128 King Street N இல் அமைய இருக்கும்

Condo வில் முதலிடுவதற்கான அரிய வாய்ப்பு.

ONE28 Condos

Starting At The Low $300, 000s

Special
Platinum VIP one day Sale even
Saturday, April 7th, 2018 - 11AM
Call For more Details



- Modern-Designed & Luxurious Suites Just Minutes From Downtown Waterloo, Wilfred Laurier, University Of Warerloo and conestoga college.
- Includes Modern Building Facilities Such As Terrace Lounge, Fitness Room, Party Room, & Much More
- Number One Spot in Canada's Technological Giant
- Offering 1Bed, 1Bed + Den, & 2 Bed Starting At The Low $300Ks

Deposit Structure:

- $5000 With Offer
- 5% (Less $5000) in 30 Days
- 5% in 180 Days
- 5% in 370 Days
- 5% On Occupancy (2020 Spring)

PLATINUM VIP INCENTIVES

- 2-YEARS Rental Guarantee
- 2-YEARS Free Property Management Services
- 2-YEARS Free Maintenance
- Free Assignment
- Right To Lease During Occupancy
- Capped Development Charges



Century 21
MLS MULTIPLE LISTING SERVICE®



Elilan Panchadcharam
416.554.9909


Hari Nallarethnam
416.839.0066

அரசபூங்கா 2018 கலைவிழா



பூநகரி அபிவிருத்திச் சங்கம் கனடாவினால் பூநகரி மக்களின் கலைவிழா அரசபூங்கா 2018 மிகவும் சிறப்பாக கனடா கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் மாலை 6:00 மணியளவில் திரு திருமதி சண்முகதாசன் செல்லையா (ஓய்வுபெற்ற கிராம சேவை அலுவலர்) அவர்களின் மங்கல விழக்கேற்றலுடன் ஆரம்பமகியது.

சிறார்களின் நிதழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது இத்தோடு சிறப்பு விருந்தினராக "பூநகரான்" அமரர் குகதாசன் பொண்னம்பலம் அவர்களின் மகள் செல்விதர்மினி குகதாசன் (Barrister and Solicitor) கலந்து கொண்டது பூநகரான் திரு குகதாசன் அவர்களின் நினைவுகளை மீண்டும் ஞாபகம் உட்டியதாக அனைவரையும் மகிழ்வித்தது அத்துடன் பூநகரி அபிவிருத்திச் சங்கம் கனடா அமரர் திரு திருஞாவுக்கரசு இரசநாயகம் அவர்களின் ஞாபகர்த்தமாக மத்தியகல்லுரிக்கு அருகாமையில் மன்னார் விதியில் பேருந்து தரிப்பிட நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது தலைவர் உரையில் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் பற்றி விபரித்தார் உங்களால் ஆன நிதி உதவிகளை செய்யும்படியும் கேட்டுக்கொண்டார்.





வீரத் தாய்க்கு ஈழமுரசின் அஞ்சலி



ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய் இல்லை மாவீரன் எனக் கேட்ட தாய்"

1989 ஆம் ஆண்டு தைத் திங்கள் 15ஆம் நாள் இந்திய இராணுவத்துடனான நேரடி

மோதலில் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட மரியதுரை மகேந்திரன் எனும் இயற்பெயரைக் கொண்ட மாவீரன் மேஜர் தும்பனின் தாயார் **அன்னம்மா அந்தோனிப்பிள்ளை** அவர்கள் 2018 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 25 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

தாயக மண்ணில் இருந்து புலம் பெயர்ந்து கனடிய மண்ணில் கால் பதித்த நாள்

முதல் தாயக நிகழ்வுகளில் கலந்து கொண்டு இந்த வீரத் தாய் தேசியக்கொடியேற்றியது, பொதுச் சுடரேற்றியது போன்ற நிகழ்வுகள் நெஞ்சில் நிழலாட மாவீரன் மேஜர் தும்பனின் வீரத் தடங்களில் ஞாபக அலைகள் பின்னோக்கி நகர்கிறது.

இந்திய இராணுத்தினனின் அராஜகத்திற்கு பதிலடி கொடுத்த புலிவீர்ர்களில் மேஜர் தும்பனின் புலிவீரம் மாபெரும் வரலாறு.

இனிய இளைய வயதில் ஈழம் காக்க இந்தியப் படையினரோடு போராடி இந்த மாவீரன் படைத்த வரலாறு எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஈழவர் நெஞ்சை விட்டு அகலாது . இத்தகைய மாவீரனை கருவில் தாங்கி ஈழத் தாய்க்கு பரிசாய்த் தந்த வீரத்தாயின் மறைவில் விழிநீர் கோர்த்து அஞ்சலி செலுத்துவதில் ஈழமுரசு வரலாற்றுக் கடமை புரிந்த நிறைவு கொள்கிறது.


அஞ்சலி நிகழ்வு

முனைவர் அய்யா ம.நடராசன் அவர்களிற்கு Toronto கனடாவில் அஞ்சலி நிகழ்வு

இடம்: தமிழிசை கலாமன்ற மண்டபம்
திகதி: 30-3-2018 வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 4.00 -7.00 வரை

தமிழ்தேசிய உணர்வாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கனடா வாழ் தமிழர்கள்
தொடர்புகளுக்கு : 416-574 2828



மாணவர் மத்தியில் நான் பேசுவதை தடுக்கின்றனர்

கமலஹாசன் சொல்கிறார்



நான் மாணவர்கள் மத்தியில் பேசக்கூடாது எனப் பல தடைகள் விதிக்கப்படுகின்றன‘ எனப் தனியார் கல்லூரி நிகழ்ச்சியில் மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.


திருவள்ளூர் அடுத்த பொன்னேரியில் தனியார் கல்லூரி ஒன்றில் மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் மாணவர்கள் மத்தியில் பேசினார். அப்போது, மாணவர்கள் படித்து முடித்துவிட்டு எங்கே செல்லப்போகிறார்கள் என்ற சந்தேகம் பெற்றோருக்கும், பேராசிரியர்களுக்கும் இருக்கக் கூடாது. அதற்கு நாடு மாற வேண்டும். அதை மாற்றும் பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது.

நான் பல பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்ல விடாமல் சில தடைகள் இருக்கின்றன. மாணவர்களிடையே பேசி, இன்றைய நிலை குறித்து நான் புரிய வைத்துவிடுவேனோ என்ற பதற்றம் பலருக்கு இருக்கிறது. அதற்கு நான் இப்படி பதில் சொன்னேன். நான் கல்லூரிக்குச் செல்வதை நீங்கள் தடை செய்யலாம். ஆனால், நான் கற்பதை நீங்கள் தடை செய்ய முடியாது.

மாணவர்கள் படித்து முடித்து வெளியே வரும் போது உங்களை தாக்கப் போவது, அரசியலும் ஊழலும் தான். அதை எதிர்கொள்ள உங்களுக்கு அரசியல் புரிந்திருக்க வேண்டும். உங்களுக்குப் புரிந்துவிட்டால், அரசியலுக்கும் வரும் அரசியல்வாதிகள் நியாயமாக இருப்பதைத் தவிர வேறு வழி இருக்காது. நீட் விவகாரத்தில் மாணவர்களுக்கு இருக்கும் தெளிவு மத்தியில் இருப்பவர்களுக்கு இல்லை. சேறு எங்கு இருந்து வருகிறது என்பதைப் பார்த்து, விவசாயிகளை மதிக்க வேண்டும். திராவிடத்தை ஒழிக்க முடியாது. அது ஒரு இனத்தைக் குறிக்கும். திராவிடம் நாடு தழுவியது என்றார்.



தினகரனுக்கு குக்கர் சின்னம் வழங்க உச்ச நீதிமன்றம் தடை



டி.டி.வி.தினகரனுக்கு குக்கர் சின்னம் ஒதுக்கீடு செய்து டெல்லி உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

அதிமுகவில் முதல்வர் கே.பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அணிகளுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கப்பட்டது. இதையடுத்து, ஆர்.கே.நகர் தேர்தலில் குக்கர் சின்னத்தில் போட்டியிட்டு டி.டி.வி.தினகரன் வெற்றி பெற்றார். இந்நிலையில், உள்ளாட்சித் தேர்தல் உள்ளிட்ட தேர்தல்களை சந்திக்கும் வகையில் தற்காலிகமாக கட்சியின் பெயர் மற்றும் சின்னத்தை ஒதுக்கித் தர தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடும்படி டெல்லி உயர் நீதிமன்றத்தில் தினகரன் வழக்கு தொடர்ந்தார். அத்துடன்,அனைத்திந்திய அம்மா அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், எம்ஜிஆர் அம்மா திராவிட முன்னேற்றக்கழகம், எம்ஜிஆர் அம்மா திராவிட கழகம் என்ற பெயர்களை அளித்து, இதில் ஒன்றை தங்களுக்கு வழங்கும்படியும் கோரியிருந்தது.


இந்த வழக்கில் கடந்த மார்ச் 9-ம் தேதி தீர்ப்பளித்த டெல்லி உயர் நீதிமன்றம், டி.டி.வி.தினகரன் தரப்புக்கு, ஒரு பொதுவான சின்னம் மற்றும் அவர்கள் விருப்பத்தின் படியான உரிய பெயரை ஒதுக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையம் நேற்று டி.டி.வி.தினகரன் தரப்பை அழைத்து விளக்கம் கேட்டது. தினகரன் தரப்பில் ஆஜராகி உரிய சின்னத்தையும், கட்சி பெயரையும் பெற நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் டெல்லி உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, டிடிவி தினகரன் தரப்புக்கு குக்கர் சின்னம் ஒதுக்கீடு செய்த டெல்லி உயர்நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்காலத்தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், வழக்கை டெல்லி நீதிமன்றத்தில் இரு நீதிபதிகள் அமர்வு விசாரிக்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். இரட்டை ஒதக்கீடு தொடர்பான வழக்கை இரண்டு வாரங்களுக்குள் விசாரித்து முடிவை அறிவிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்டிருந்த அறையிலேயே ஜெயலலிதாவுக்கு அவசர ஆபரேஷன்

பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் மற்றொரு சாட்சியம்

‘‘அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த நேரத்தில் ஜெயலலிதாவுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. அப்போது, அவர் அனுமதிக்கப்பட்டிருந்த அறையிலேயே அவருக்கு அவசரமாக ஆபரேஷன் நடைபெற்றது’’ என்று தமிழகத் தலைமைச் செயலாளராக இருந்த ராம மோகன ராவ் வாக்குமூலம் தந்துள்ளார். ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரித்துவரும் ஆறுமுகசாமி விசாரணை ஆணைய்த்தில் அவர் இப்படி சாட்சியம் கூறியிருப்பது, ஜெயலலிதா மரண மர்மத்தில் அடுத்த பரபரப்பைப் பற்ற வைத்துள்ளது.



2016 டிசம்பர் 4-ம் தேதி மாலை ஜெயலலிதாவுக்கு மாரடைப்பு ஏற்பட்ட தகவல் தெரிந்து அப்போலோ மருத்துவமனைக்கு ஷீலா பாலகிருஷ்ணன் சென்றார். அங்கிருந்த டாக்டர் கிரிநாத்திடம் திடீர் மாரடைப்பு ஏற்பட்டதற்கான காரணத்தை அவர் கேட்டுள்ளார். அதற்கு டாக்டர் கிரிநாத், ‘‘நீண்ட காலம் சர்க்கரை நோய் பாதிப்பு உள்ளவர்களுக்கு திடீர் மாரடைப்பு வர வாய்ப்புள்ளது’’ என்று சொல்லியிருக்கிறார். அதன்பிறகுதான், ‘எய்ம்ஸ் மருத்துவர்களை உடனடியாக அழைக்கலாம்’ என்று ஷீலா பாலகிருஷ்ணன் சொன்னார்.

‘‘அதற்கு மறுதினம் மாலையில் முதல்வர் இறந்துவிட்டதாகச் செய்தி பரவியது. அந்த நேரத்தில், ஜெயலலிதா எக்மோ சிகிச்சையில்தான் இருந்தார். அன்று இரவு முதல்வர் இறந்தார். புடவை கட்டிய நிலையில் தான் அவர் உடல் இருந்தது. அந்த நிலையில் தான் நான் வணங்கினேன்’’ என்ற தகவலையும் சொல்லியிருக்கிறார் ஷீலா பாலகிருஷ்ணன்.

ராம மோகன ராவ், ‘‘முதல்வருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால், அவர் அனுமதிக்கப் பட்டிருந்த அறையிலேயே அவசர ஆபரேஷன் நடைபெற்றது. அவசரமாக அவரின் நெஞ்சுப் பகுதியை உடைத்து, இதயத்தில் கருவிகளைப் பொருத்தினர். அதனால், ஏராளமாக ரத்தம் வெளியேறிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துப் பதறிவிட்டேன். அங்கிருந்த மருத்துவர்களிடம், ‘அறையில் வைத்தே ஏன் ஆபரேஷன் செய்கிறீர்கள்? ஆபரேஷன் தியேட்டருக்குக் கூட்டிச் செல்லலாமே?’ என்று கேட்டேன். அந்த நேரத்தில், அந்த அறையில் சசிகலா இல்லை’’ என்று பதிவு செய்துள்ளார்.

‘‘எய்ம்ஸ் மருத்து வர்கள் ‘எக்மோ கருவியை ஜெயலலிதாவுக்குப் பொருத்தி, 24 மணி நேரம் அதன் செயல்பாடுகளைக் கண்காணிக்க வேண்டும்’ என்று ஆலோசனை தந்தனர். 24 மணி நேரம் கடந்தும் இதயத்தின் செயல்பாட்டில் எந்த முன்னேற்றமும் ஏற்படாததால், அந்தக் கருவியை அகற்றினர். எக்மோ கருவி அகற்றப்படும் நேரத்தில் வெங்கய்ய நாயுடு அப்போலோ மருத்துவமனையில் இருந்தார்’’ என்ற தகவலையும் ராம மோகன ராவ் சொல்லியிருக்கிறார்.



ரணில் - மைத்திரி

அதிகாரப்போட்டி எங்கு சென்று முடியப்போகின்றது?

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான அதிகாரப் போராட்டமானது இருவரையும் மிகவும் மோசமாகப் பாதித்துள்ளதுடன் இவ்விருவரினதும் நீண்டகால அரசியல் மூலோபாயங்களின் வரையறைகளையும் வெளிப்படுத்தியுள்ளதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்விரு தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற அதிகாரப் போட்டியானது சிங்கள பௌத்த இனவாதம் நாட்டில் தலைவிரித்தாடுவதற்கும் நாட்டில் வன்முறைகள் ஏற்படுவதற்குமான போலித்தனமான வெற்றியைக் கொடுத்துள்ளது.

எனினும், பெப்ரவரி 10 அன்று நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய அரசாங்கத்தில் நிலவும் ஒற்றுமையின்மை வெளிப்படுத்தப்பட்டமை மக்கள் இலகுவாக மறந்துவிட முடியாது. இத்தேர்தல் பெறுபேறைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தை விட தனது அரசாங்கமானது ஊழல் மிக்கதாக உள்ளதாக மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

இதற்கு மாறாக, மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்கு முயற்சித்த ஐக்கிய தேசியக் கட்சியின் இளையோர்களை ரணில் அமைதிப்படுத்தியிருந்தார். ரணிலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஆதரவளித்திருந்தார். இதனால் நிலைமை சுமுகமாகியது.

> மகிந்த விசுவாசிகளைத் தனக்கு ஆதரவளிக்குமாறு உந்துதல் வழங்குவதற்குப் பதிலாக, முன்னாள் அதிபருக்கு ஆதரவளிக்குமாறும் அவர்களை விட ஐ.தே.க மிக மோசமான ஊழல்களில் ஈடுபடுவதாகவும் மைத்திரி பரப்புரை செய்துள்ளார். ஆகஸ்ட் 2015 பொதுத் தேர்தலில் ஐ.தே.க இழந்த அதேயளவு வாக்குகளை இத்தேர்தலில் மைத்திரியின் கட்சி பெற்றுள்ளது.

ஜனநாயக நாடான சிறிலங்காவின் தலைவிதியானது 341 உள்ளூராட்சி சபைகளால் மட்டும் தீர்மானிக்கப்படமாட்டாது. இதற்கும் அப்பால் 2020ல் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலிலேயே நாட்டின் தலைவிதி தீர்மானிக்கப்படும் என்பதே உண்மையாகும்.

ஜனநாயகம் நிலைநாட்டப்படாது, அரசியல் சாசனத்தில் மாற்றம் கொண்டுவரப்படாவிட்டால் 2020 ஜனவரியில் இடம்பெறும் அதிபர் தேர்தல் மூலம் புதிய அதிபர் பதவியேற்க வேண்டும். அத்துடன் பெப்ரவரி 2020ல் நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும். மகிந்த ராஜபக்ச அதிபர் தேர்தலில் ஆர்வம் காட்டமாட்டார் என்பதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் மகிந்தவின் பெரும்பான்மை ஆதரவாளர்கள் அடுத்த அதிபர் தேர்தலில் கோத்தாபய நிறுத்தப்படுவார் என நம்புகின்றனர்.

இதேவேளையில், மறுபுறத்தே அதிபர் தேர்தலில் போட்டியிடுமாறு ரணில் மற்றும் மைத்திரியிடம் அவர்களது ஆதரவாளர்கள் அழுத்தம் கொடுக்கலாம். இரண்டாம் தடவையாக அதிபர் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என அதிபராகப் பதவியேற்ற போது மைத்திரிபால சிறிசேன அறிவித்திருப்பினும் கூட, சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக மைத்திரியே அதிபர் வேட்பாளராக நிறுத்தப்படுவார் என பலரும் நம்புகின்றனர்.நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறானது தற்போது ஆட்சியிலுள்ள தேசிய அரசாங்கம் தொடர்பான நம்பிக்கையை சிதறடித்துள்ளதுடன் பல்வேறு முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது.

முன்னைய ஆட்சியில் ஊழல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கத் தவறியமையே தற்போது நடந்து முடிந்த தேர்தலில் பின்னடைவு ஏற்பட்டமைக்கான காரணம் என உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னர் ரணில் விக்கிரமசிங்கவால் கூட்டப்பட்ட முதலாவது ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சட்ட ஒழுங்கைக் கடைப்பிடிக்கத் தவறியமை, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, நாட்டில் வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டமை போன்றன ஐ.தே.க அரசாங்கத்திற்கான வாக்குகளைக் குறைத்துள்ளதாகவும் குறிப்பாக சட்ட ஒழுங்கு நிலைநாட்டத் தவறியமையே இதற்கான முக்கிய காரணம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

நாட்டில் சட்ட ஒழுங்கு நிலைநாட்டப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டை முன்னாள் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சகல ரட்ணயக்க ஏற்றுக்கொண்டதுடன் இதற்காக தான் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

எனினும், சிறிலங்கா அதிபரின் அழுத்தத்தின் காரணமாகவே ஊழல் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கவில்லை என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதிபரின் தலையீடின்றி, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச மற்றும் ஏனைய குற்றவாளிகளை முன்னாள் சட்ட மற்றும் ஒழுங்கு அமைச்சர் மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பாதுகாத்திருக்க முடியாது.

கோத்தாபயவைப் பாதுகாக்கும் மைத்திரியின் மூலோபாயமானது தோல்வியடைந்துள்ளது என்பதையே அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறு தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும், கோத்தாபயவை மைத்திரி பாதுகாப்பதாக கூறுவதன் மூலம் சிறிசேனவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த முடியும் என ரணில் நம்புகிறார் எனக் கூறுவது தவறானதாகும்.

கோத்தாபயவை மூன்றாவது வேட்பாளராக பயன்படுத்தாது, ரணில் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று மைத்திரியை வெற்றி பெற முடியும் என்பது தெளிவாகும். பெப்ரவரி 10 அன்று இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மைத்திரி மற்றும் மகிந்த பெற்ற வாக்குகள் ஐ.தே.க பெற்ற வாக்குகளை விட குறைவானதாகும். கோத்தாபயவை சட்டத்திலிருந்து தான் பாதுகாத்தமை தொடர்பான குற்றச்சாட்டை கடந்த ஜனவரியில் மைத்திரி ஏற்றுக்கொண்டிருந்தார்.

பிளவுபட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கடும்போக்கு சிங்கள பௌத்தர்களை ஒன்றிணைப்பதற்கு கோத்தாபயவே பொருத்தமான நபர் என்பதையும் இக்கட்சியின் தலைமைத்துவத்தை ஒருங்கிணைப்பதற்கும் கோத்தாபய தேவை என்பதை மைத்திரியின் விசுவாசிகள் நம்புகின்றனர். இவ்வாறு அறிவித்ததன் மூலம், கோத்தாபய கைதுசெய்யப்படுவதிலிருந்து இவரை மைத்திரி பாதுகாத்துள்ளார்.

அத்துடன் சிங்கள இனத்தின் இரட்சகராக கோத்தாபய உள்ளார் என்பதையும் இதனால் உள்ளூராட்சித் தேர்தலில் கோத்தாபயவிற்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்கின்ற மறைமுகமான செய்தியை கடந்த ஜனவரி மாதம் மைத்திரி மக்களுக்கு விடுத்திருந்தார் என்பது தெளிவாகும். இதேவேளையில், ஐ.தே.க மீது மைத்திரி பழிசுமத்தியுள்ளார். ஆனால் இவரின் இந்த அரசியல் மூலோபாயமானது முற்றிலும் எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தியுள்ளது.

மகிந்த விசுவாசிகளைத் தனக்கு ஆதரவளிக்குமாறு உந்துதல் வழங்குவதற்குப் பதிலாக, முன்னாள் அதிபருக்கு ஆதரவளிக்குமாறும் அவர்களை விட ஐ.தே.க மிக மோசமான ஊழல்களில் ஈடுபடுவதாகவும் மைத்திரி பரப்புரை செய்துள்ளார். ஆகஸ்ட் 2015 பொதுத் தேர்தலில் ஐ.தே.க இழந்த அதேயளவு வாக்குகளை இத்தேர்தலில் மைத்திரியின் கட்சி பெற்றுள்ளது.

ஆகவே மைத்திரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எந்தவொரு வாக்குகளையும் பெற முயற்சிக்கவில்லை என்பதுடன் ஐ.தே.கவின் வாக்கு வங்கியை சிதறடிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என வாதிட முடியும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிங்கள இனவாத வாக்குக்ளை மகிந்தவின் புதிய கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவிற்கு மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார் எனக் கூற முடியும்.

- Ceylon Today


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com


BEST DEAL FROM
ROGERS™
Best Student offer Deal Ignite 100 Unlimited Internet
NO Contract
No Connection fee
$60
Home Phone, Internet Digital Basic TV
$99.95
Tamil Channel Starting from
$8.00
Home Phone
$8.99 only
Ignite 1GB with Basic TV.
only $99.99
தமிழ் TV அலைவரிசைகளின் புதிய பொதி
$30 மாதம் ஒன்றுக்கு
KTV
JAYA TV
VIJAY
SUN TV
தமிழில் தொடர்புகளிற்கு: SANJAY
ROGERS 416.315.2917


Mortgage?
Call Mahesan
416-816-0141
Home Equity
Refinance
Call Mahesan
416-816-0141
Residential Mortgages
2nd Mortgages upto $500,000
Private Funds Available
Debt Consolidation
Home Equity - Refinance
No Income Qualifier - No Credit
Call me for more details...
5200 Finch Ave. E. Unit 306,
Scarborough, ON. M1S 4Z5
KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623
Mahesan Subramaniam AMP
Principal Broker Lic #12623
Office : 416-335-5264 / Direct : 416-816-0141

13 வயதுக்கு உட்பட்டோருக்கான பேஸ்புக்... நல்லதா? ஆபத்தா?



சில ஆண்டுகளுக்கு முன்பு வரை வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை உணவு, உடை மற்றும் இருப்பிடம். ஆனால், இன்று அதோடு ஃபேஸ்புக், வாட்ஸ்அப் போன்ற விஷயங்கள் நான்காவது அத்தியாவசியத் தேவையாக இணைந்து கொண்டிருக்கிறது. இந்த சமூக வலைதளங்களை சிறியவர் முதல் பெரியவர் வரை இன்று பாகுபாடில்லாமல் பயன்படுத்தி வந்தாலும், அதில் எந்த அளவுக்கு நன்மை இருக்கிறதோ அதை மிஞ்சிய ஆபத்துகளும் உண்டு. குறிப்பாக குழந்தைகளுக்கு.

இதற்காகதான் ஃபேஸ்புக் நிறுவனம் குழந்தைகளுக்கான பிரத்யோக ஃபேஸ்புக் மெஸெஞ்சர் ஆப் ஒன்றை வடிவமைத்துள்ளது. சென்ற வாரம் நியூயார்க் நகரில் வெளியிடப்பட்ட இந்த ஆப் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

13 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட இந்த ஆப் மூலம் குழந்தைகள் குறுஞ்செய்திகள், வீடியோ, புகைப்படங்கள், ஸ்டிக்கர்கள் போன்றவற்றை அனுப்பவும், தங்கள் விரும்பும் படங்களை வரைந்து அனுப்பும் வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இதில் குழந்தைகள் வரையறுக்கப்பட்ட தகவல்களை மட்டும்தான் பெறமுடியும். பெற்றோர்களுடைய அனுமதியோடு மட்டும்தான் குழந்தைகள் கணக்கைத் தொடங்க முடியும்.

இந்தக் கணக்கைத் தொடங்க பிள்ளைகள் பெயரை மட்டும் தந்தால் போதும், பெற்றோரின் ஃபேஸ்புக் மின்னஞ்சல் மற்றும் கடவுச்சொல்லை கொண்டே தங்கள் குழந்தைகளுக்கான ஃபேஸ்புக் கணக்கைத் தொடங்க முடியும். மேலும், தங்கள் குழந்தைகள் வேறொரு குழந்தை கூட நட்புக்கணக்கை தொடங்கவும் பெற்றோரின் அனுமதியை கேட்கும்படி செய்துள்ளோம் என்கிறார் ஃபேஸ்புக் நிறுவனத்தின் தேசிய பாதுகாப்புத் தலைமை அதிகாரியான ஆன்டி கோன் டேவிஸ்.

குழந்தைகளுக்கான பாதிப்புகளை குறைக்கும் வகையில் இதில் எவ்வித விளம்பரங்களும் வெளியிடப்போவதில்லை என்கிறது ஃபேஸ்புக் நிறுவனம். 13 வயது முடிந்ததும் இந்தக் கணக்கு தாமாகவே எல்லோரும் பயன்படுத்தும் ஃபேஸ்புக் கணக்காக இதை நிறுவனமே மாற்றிவிடும். ஒருவேளை இடையிலே பெற்றோர் இந்தக் கணக்கை விட்டு வெளியேற விரும்பினாலும் அதற்கும் வழிவகை செய்து தந்திருக்கிறது இந்த ஆப்.

இந்தச் செயலியை வடிவமைக்கும் முன் ஃபேஸ்புக் நிறுவனம் இதுகுறித்த கருத்தை 100 க்கும் மேற்பட்ட பெற்றோர்களிடமும், பல நிறுவனங்களைச் சார்ந்த குழந்தைகள் நல வழக்கறிஞர்களிடமும் கேட்டிருக்கிறது. மேலும் ஃபேஸ்புக்கின் தனியுரிமை கொள்கையின் படி இந்த ஆப் மூலம் அனுப்பப்படும் தகவல்களையும் சேகரித்து, தேவைப்படும் சமயத்தில் அதை பகிர்ந்துகொள்ளும் உரிமையும் இந்நிறுவனத்துக்கு உள்ளது என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம்.

மார்க் ஸுக்கர்பர்க் கடந்த 2011-ம் ஆண்டே இந்த ஆப் குறித்த தகவலை வெளியிட்டிருந்தார். முதலில் இது ஆப்பிள் ஆப் ஸ்டோரில் வெளியிடப்படவுள்ளது. அதைத் தொடர்ந்து வரும் வருடத்தில் ஆண்ட்ராய்டு மற்றும் பிற மொபைல் இயங்குதளத்துக்கு வெளியிடப்படும்.

தனது இன்னொரு சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராமில் இதுபோன்ற குழந்தைகளுக்கான ஆப் உருவாக்கும் நோக்கம் தற்போது இல்லை என்று ஃபேஸ்புக் கூறியுள்ளது. பல அளப்பரிய நன்மைகளை இந்த சமூக வலைத்தளங்கள் தந்தாலும் அது உருவாக்கும் சமூக பிரச்னைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இது போன்ற சமூக வலைத்தளங்கள் குழந்தைகளுக்குத் தேவை இல்லாத ஒன்று என்னும் கருத்தைப் பெற்றோர்கள் முன்வைப்பதும் மறுக்கமுடியாத ஒன்று.

டிஜிட்டல் NEWS

கூகுள் மேப்பில் புதிய 'குறுக்கு வழி' வசதி



இணையதள செயலியான கூகுள் மேப்பில் தற்போது புதிய சார்ட்கட்ஸ் வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. முன்னதாக மக்கள் வெளியில் செல்லும் போது வழி தெரியவில்லை என்றால் அங்குள்ளவர்களிடம் வழி கேட்டு செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால், இதற்கு அவசியமில்லாத வகையில் உருவானதுதான் கூகுள் மேப். தற்போதுள்ள கூகுள் மேப்பில் எந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் எனப் பதிவிட்டால் மட்டுமே போதும் அந்தப் பகுதிகளை இணையம் மூலம் இந்தச் செயலி சரியாகக் காட்டிவிடும். இதனால் யாரிடமும் நின்று வழி கேட்டு நேரத்தை வீணடிக்காமல், செல்லவேண்டிய இடத்திற்குச் சரியாகச் செல்லமுடியும்.

இந்த கூகுள் மேப்பை தற்போதுள்ள வாகன ஓட்டிகள், புதிதாக ஓரிடத்திற்குச் செல்பவர்கள் எனப் பலர் பயன்படுத்தி வருகின்றனர். மொபைல் ஃபோனில் உள்ள கூகுள் மேப்ஸ் செயலியில் சார்ட்கட்ஸ் வசதி படிப்படியாக அறிமுகப்படுத்தபட்டு வருகிறது. இதற்கு முன் 14 குயிக் ஆக்சன் இந்தச் செயலியில் உள்ளது. இதன்மூலம் மால்ஸ், மெட்ரோ ஸ்டேஷன் மற்றும் பெட்ரோல் பங்க்குகள் உள்ளிட்டவற்றை எளிதில் அடையாளம் காண முடியும்.

இதனை தொடர்ந்து தற்போது மேலும் சில அம்சங்களை இந்தச் செயலியில் அறிமுகப்படுத்தியுள்ளனர். புதிய அப்டேட்டில் பயனர்கள் தாங்களே எடிட் செய்யும் வசதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயனர் விரும்பும் அல்லது அதிகம் பயன்படுத்தும் ஆப்ஷன்களை தாங்களே சேர்த்துக்கொள்ளலாம். மேலும், பயனர் பதிவு செய்யும் இடத்திற்கு அருகிலுள்ள உணவகங்கள், வணிக வளாகங்கள், திரையரங்கங்கள் உள்ளிட்டவற்றை தானாகவே காட்டும். முன்னதாக இருந்த வசதியிலிருந்து இது சற்று மேம்பட்டு இருக்கும். மேலும், நிறைய அப்டேட்டுகள் தொடர்ந்து வெளியிடப்படும் என்றும் தற்போதுள்ள வசதி விரைவில் அனைத்து ஃபோன்களிலும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கணினி வைரஸ்கள்... மூன்றாம் உலகப்போரில் வல்லரசுகளின் ஆயுதம்?



மூன்றாம் உலகப்போர் போல ஒன்று துவங்க இருக்கிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? ஆனால், அது போர்க்களத்தில் நடைபெறாது. எதிரிகள் யாரென்று கணிக்க முடியாத அளவிற்கு முகமூடி அணிந்துகொண்டு நிற்க ஏதுவான சைபர் களத்தில்தான் அது அரங்கேறவிருக்கிறது. ஆம்! அதற்கான ஆயத்தப் பணிகள் நடந்துகொண்டே இருக்கின்றன. எவ்வளவு பெரிய தீயும் சிறிய கங்கிலிருந்துதான் தொடங்குகிறது. ஆஸ்திரிய இளவரசரை செர்பிய இளைஞன் சுட்டுக்கொன்றான் என்ற சிறிய தீப்பொறியில், இரண்டு சிறிய நாடுகளுக்குள் யுத்தம் ஏற்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தை பல வல்லரசு நாடுகள் தங்கள் பகையைத் தீர்த்துகொள்ளவதற்காகத் தலையிட அது முதலாம் உலகப் போராக மாறிப்போனது.

இன்றும் சில வல்லரசு நாடுகளுக்கு அனைத்து நாடுகளையும் தன் நிழலின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் போர் என்று வந்தால் இரு நாடுகளுக்கும் ஏற்படும் அழிவு மிகக் கடுமையாக இருக்கும் என்பதை எண்ணி அமைதி காக்கின்றன. ஆனால், மறைமுகமாக வளர்ந்துவரும் நாட்டை வீழ்த்த என்ன செய்ய வேண்டுமோ அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுக்கொண்டேதான் இருக்கின்றன. அதில் ஒன்றுதான் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை அழிப்பது. இது நவீன யுகம். பொருளாதாரத்தை அழிக்கப் பெரிதாகவெல்லாம் ஒன்றும் செய்யத் தேவையில்லை. ஒரு கம்ப்யூட்டர் வைரஸே ஒரு நாட்டின் தலையெழுத்தை மாற்றியமைக்கப் போதுமானதாக இருக்கிறது. அப்படி ஒரு தாக்குதல்தான் ஈரானின் மீது நடத்தப்பட்டது (படுகிறது).

அனைத்து நாடுகளுக்குமே அரபு நாடுகளின் மீது ஒரு கண் உண்டு. வேறு எந்தவிதமான இயற்கை வளங்களும் இல்லாத நிலையிலும், எண்ணெய் வளங்களை வைத்தே அவை பொருளாதாரத்தில் திமுதிமுவென வளர்ந்து நிற்கின்றன. உலகின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதே கச்சா எண்ணெய் யாகத்தான் இருக்கிறது. இது யாருடைய கண்களையோ உறுத்த 'ஸ்டக்ஸ்நெட்' (Stuxnet) என்ற வைரஸ் ஈரான் நாட்டின் பல ஆலைகளுக்குள்ளும் புகுத்தப்பட்டது. இந்த வைரஸின் முக்கிய இலக்குகளே 'ப்ரோக்கிராமபிள் லாஜிக் கன்ட்ரோலர்களை' (programmable logic controller) தாக்கி அதன் செயல்களை முடக்குவதுதான். பெரும்பாலான ஆலைகள் இதைக்கொண்டு தான் இயங்குகின்றன. இந்த பி.எல்.சி களின் வேலையே ஆலைகளில் இருக்கும் இயந்திரங்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பிப்பதுதான். ஈரான் நாட்டில் இயங்கிவரும் அனைத்து எண்ணெய் ஆலைகளிலும் இந்தத் தொழில்நுட்பம்தான் பயன்படுத்தப்படுகிறது. இந்த வைரஸை அதில் செலுத்துவதன் மூலம் அந்த இயந்திரங்களின் செயல்பாடுகளை இந்த வைரஸினால் கட்டுப்படுத்த முடியும். அப்படிதான் மெதுவாகச் சுழலும் 'சென்ட்ரிப்யூஜ்'களை (centrifuge) சராசரிக்கும் அதிகமாகச் சுற்ற வைத்துப் பாதிப்புகளை ஏற்படுத்தியது இந்த வைரஸ்.

மற்றுமொரு பிரச்னை என்னவென்றால் இந்த வைரஸ் தாக்கியிருக்கிறது என்று தாக்கப்பட்டிருக்கும் கணினி அமைப்பில் கண்டுபிடிக்க முடியாது. இந்த வைரஸ் 2010-ம் ஆண்டே தன் நாசவேலையைத் துவக்கிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவும் இஸ்ரேலும் சேர்ந்துதான் இந்த நாசவேலையை ஈரானுக்கு எதிராகச் செய்தன எனச் சொல்லப்படுகிறது. எனினும் அமெரிக்காவும் இஸ்ரேலும் இதனைத் தொடர்ந்து மறுத்து வருகின்றன. இந்த வைரஸ்தான் உலகில் கம்ப்யூட்டர் கோடிங்காலேயே செய்யப்பட்ட முதல் ஆயுதம். இந்த வைரஸினால் இது வரை ஆறு நாடுகளே மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. அதில் இந்தியாவுக்கு மூன்றாவது இடம். ஈரானில் அது 60 சதவிகிதம் பாதிப்புகளை உருவாக்கி இருக்கிறது. அமெரிக்கா ஆறாவது இடத்திலும் பாகிஸ்தான் ஏழாவது இடத்திலும் உள்ளன.

யாழ். மேயராக ஆர்னோல்ட் தெரிவானது இப்படித்தான்...



யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட இமா னுவேல் ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட்டார். யாழ்.மாநகரசபையின் முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் ஆகியோரை தெரிவுசெய்வதற்கான முதலாவது யாழ்.மாநகரசபை அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் திங்கட்கிழமை காலை யாழ்.மாநகரசபைக் கூடத்தில் நடைபெற்றது.

ஆரம்பத்தில் சபை முதல்வரை தெரிவு செய்யுமாறு ஆணையாளரால் கோரப்பட்ட நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் இமானுவல் ஆர்னோல்ட்டையும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனையும், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் முடியப்பு ரெமிடியாசையும் தமது கட்சி சார்பில் முதல்வர் வேட்பாளராக உறுப்பினர்கள் முன்மொழிந்தனர்.

இதையடுத்து மாநகர முதல்வராக மூவரின் பெயர் பிரேரிக்கப்பட்டமையால் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் இது இரகசிய வாக்கெடுப்பா? பகிரங்க வாக்கெடுப்பா என உள்ளூராட்சி ஆணையாளரினால் கோரப்பட்டது. இதன்போது உறுப்பினர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டதையடுத்து இரகசிய வாக்கெடுப்பு மற்றும் பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவது என்பது தொடர்பில் பகிரங்கமாக கருத்துக் கேட்கப்பட்டது.

இதன்போது தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பதினாறு உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் மூன்று உறுப்பினர்கள் உள்ளிட்ட 19 உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பையும் ஏனைய 25 உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பையும் கோரிய நிலையில் முதல்வரை தெரிவு செய்வதற்கென இரகசிய வாக்கடுப்பு உறுப்பினர்களிடையே நடைபெற்றது.

இதில் ஒவ்வொரு உறுப்பினர்களும் பெயர்கள் அழைக்கப்பட்ட நிலையில் ஆணையாளரிடம் வாக்குச் சீட்டைப் பெற்று புள்ளடி இட்டு தேர்தல் பெட்டிகளில் இட்டனர். இதனையடுத்து, ஆணையாளரினால் முதல்வர் வேட்பாளர்களாக இருந்தவர்கள் அல்லது அவர்கள் சார்பிலான பிரதிநிதிகளை வாக்கு எண்ணும் நிலையை பார்வையிட அழைத்தார். அவர்கள் முன்னிலையில் வாக்குகள் தரம் பிரிக்கப்பட்டு எண்ணப்பட்டன. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பிரேரிக்கப்பட்ட இமானுவேல் ஆர்னோல்ட் 18 வாக்குகளையும், விஸ்வலிங்கம் மணிவண்ணன் 13 வாக்குகளையும், முடியப்பு ரெமீடியஸ் 13 வாக்குகளையும் பெற்றனர்.

பெரும்பான்மையாக வாக்குகளை எந்த உறுப்பினரும் பெறுக் கொள்ளாத நிலையிலும், இரு உறுப்பினர்கள் சமமான வாக்குகளை பெற்ற காரணத்தால் அவர்கள் இருவருக்கிடையில் திருவிளைச்சீட்டு (குலுக்கல்) மூலம் தெரிவு நடைபெற்றது. இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் பிரேரிக்கப்பட்ட விஸ்வலிங்கம் மணிவண்ணன் நீக்கப்பட்டார்.

இதன்பின்னர் பின்னர் ஆர்னோல்ட் மற்றும் ரெமீடியஸ் இருவருக்கிடையில் மீண்டும் வாக்கெடுப்பு நடாத்துவதற்கு ஆணையாளர் கோரியபோது உறுப்பினர்களிடையே கலந்துரையாடல்கள் தேவையென கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து சுமார் 10 நிமிடங்கள் நேரம் ஒதுக்கப்பட்டது. அதன் பின்னர் வாக்கெடுப்பு நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில் ஈ.பி.டி.பியால் பிரேரிக்கப்பட்ட ரெமீடியஸ் அந்த போட்டியில் இருந்து தான் விலகுவதாக அறிவித்தார்.

இதனடிப்படையில் அதிக வாக்குகளை பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இம்மானுவேல் ஆர்னோல்ட் முதல்வராக தெரிவுசெய்யப்படுவதாக உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டார். இதையடுத்து, சபையில் முதல்வராக தெரிவுசெய்யப்பட்ட ஆர்னோலட்டுக்கு கைலாகு கொடுக்கப்பட்டது. தொடர்ந்து முதல்வருக்குரிய ஆடையை அணிந்துவந்த முதல்வரால் பிரதி மேயரை தெரிவு செய்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன்போது தமிழத் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் துரைராசா ஈசனது பெயர் பிரேரிக்கப்பட்ட நிலையில் எதிர்ப்புகள் ஏதும் இல்லாத நிலையில் துரைராசா ஈசன் பிரதி மேயராக தெரிவு செய்யப்பட்டார். இதனையடுத்து யாழ். மாநகர சபை முதல் அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபையானது 27 வட்டாரம் மற்றும் 18 விகிதாசார ஆசனங்கள் என்ற அடிப்படையில் தேர்தலில் போட்டியிட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 16 பேரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் 13 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் 10 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 3 உறுப்பினர்களும்,சிறிலங்கா சுதந்திர கட்சி சார்பில் 2 மற்றும் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் 1 உறுப்பினரும் என 45 உறுப்பினர்கள் யாழ் மாநகர சபைக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நகர முதல்வர் பதவியும் கூட்டமைப்பிடம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிக ஆசனங்களைக் கைப்பற்றிய பருத்தித்துறை நகர சபையின் முதல்வர் பதவியையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசப்படுத்தியுள்ளது.

செவ்வாய் காலை நடந்த முதல் அமர்வில், பருத்தித்துறை நகர சபையின் முதல்வர் தெரிவு இடம் பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நிறுத்தப்பட்ட ஜோசப் இருதயராஜா 7 வாக்குகளைப் பெற்று நகர முதல்வராக தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் முதல்வர் பதவிக்கு முன்னிறுத்தப்பட்ட க.பாலசுப்ரமணியம் 6 வாக்குகளை மாத்திரம் பெற்றார். பிரதி முதல்வர் பதவிக்கு, கூட்டமைப்பு சார்பில் நிறுத்தப்பட்ட மதினி நெல்சன் தெரிவு செய்யப்பட்டார்.

ஈ.பி.டி.பி. ஆதரவினாலேயே முதல்வரானார் ஆர்னோல்ட்

யாழ். மாநகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து முதல்வராக ஆர்னோல்ட் தெரிவாக ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்கியதில் எந்த உள் நோக்கமும் இல்லை. எங்கள் இனம், உறவு, மக்கள் என்ற அடிப்படையிலேயே போட்டியிலிருந்து விலகி ஆர்னோல்ட்டுக்கு ஆதரவு வழங்கினோம்.

இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.டி.பியின் சார்பில் முதல்வர்பதவிக்குப் போட்டியிட்ட சட்டத்தரணி முடியப்பு றெமீடியஸ். முதல்வர் ஆர்னோல்ட்டின் பங்களிப்போடு ஈ.பி.டி.பியின் கொள்கை கோட்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.


யாழ். மாநகர சபையின்முதலாம் அமர்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

36 உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 36 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு திருகோணமலை நகரசபை மண்டபத்தில், கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்றுள்ளது. மேலும், நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைராஜசிங்கம், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.ஸ்ரீ துரைரெட்ணசிங்கம், கட்சியின் முக்கியஸ்தர்கள் திருகோணமலை நகர சபை, உப்புவெளி பிரதேசசபை, வெருகல் பிரதே சபை, மூதூர் பிரதேசசபை, குச்சவெளி பிரதேசசபை, தம்பலகாமம் பிரதேசசபை, கிண்ணியா நகரசபை, சேருவல பிரதேசசபை ஆகியவற்றில் வெற்றிபெற்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி நகர சபை தலைவராக இராமநாதன் சிவமங்கை தெரிவு



சாவகச்சேரி நகரசபை தலைவராக இராமநாதன் சிவமங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரி நகர சபைக்கான தலைவர் மற்றும் உப தலைவர்களை தெரிவு செய்வதற்கான கூட்டம் நகரசபை மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, ஆணையாளரினால் தலைவரைத் தெரிவுசெய்யுமாறு கோரப்பட்டபோது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் யோகேஸ்வரன் ஜெயக்குமார், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் இராமநாதன் சிவமங்கை ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், ஆணையாளரினால் இருவரின் பெயர் பிரேரிக்கப்பட்டமையினால் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இரகசிய வாக்கெடுப்பா? பகிரங்க வாக்கெடு ப்பா தேவையென கோரப்பட்ட நிலையில் பகிரங்க வாக்கெடுப்பே தேவையென அதிகளவிலான உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட நிலையில், இருவரது பெயரும் பெயர்ப் பலகையில் எழுதப்பட்டு உறுப்பினர்கள் ஒவ்வொருவருடைய பெயரும் கூறி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

முடிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பில் தலைவர்களாக பிரேரிக்கப்பட்ட இராமநாதன் சிவமங்கை 12 வாக்குகளையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் பிரேரிக்கப்பட்ட யோகேஸ்வரன் ஜெயக்குமார் 6 வாக்குகளையும் பெற்ற னர். இதனையடுத்து சாவகச்சேரி நகர சபையின் தலைவராக இராமநாதன் சிவமங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து உப தலைவர் தெரிவு இடம்பெற்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அருணாச்சலம் பாலமயூரனின் பெயர்பிரேரிக்கப்பட்ட நிலையில் வேறு உறுப்பினர்களின் பெயர் பிரேரி க்கப்படாமையினால் உப தலைவராக அருணாச்சலம் பாலமயூரன் தெரிவு செய் யப்பட்டார். இரு தெரிவுகளையும் அடுத்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசுக்கு எச்சரிக்கையை கொடுத்துள்ள அறிக்கை

ஜெனீவா குறித்து சுரேஷ் பிரேமச்சந்திரன்

''இந்தத்தடவை பல தமிழ்த்தலைவர்கள் ஜெனீவாவுக்கு சென்றிருந்த போதிலும் பக்க அமர்வுகளில் மாத்திரமே இவர்களால் கலந்துகொள்ள முடிந்ததே தவிர, வேறு எதனையும் இவர்களால் சாதிக்கமுடியவில்லை. பக்க அமர்வுகள் அவசியம்தான். ஆனால், எங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவாக உறுப்பு நாடுகளை சம்மதிக்க வைப்பது மிகவும் முக்கியமானது. இந்தப் பணி இன்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரம்தான் எதிர்வரும் மார்ச் மாதம் எங்களுடைய கை ஜெனீவாவில் ஓங்கும்'' என்று ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை குறித்து மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொதடர்பில் இவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை வரவேற்கக்கூடியது. இலங்கை அரசுக்கு இந்த அறிக்கை எச்சரிக்கையை கொடுத்திருக்கிறது.

இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட தீர்மானங்கள் மிகவும் மந்த கதியில் செல்கின்றன என்பது தெட்டத் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. தொடர்ந்தும் அரசாங்கம் இவ்வாறு செயற்பட்டால் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்துக்கு இன்னும் ஒருவருட கால அவகாசம் இருக்கிறது. ஏற்கனவே, கடந்த ஒரு வருட காலத்தில் இலங்கை அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. இனிமேலும் எதையாவது செய்வோமென்ற உத்தரவாதங்களையும் கொடுக்க



வில்லை. இந்நிலையில் இலங்கைக்கு இருக்கும் ஒருவருடகால அவகாச தவணைக்குள் மாகாண சபைத் தேர்தல் களம் இடம்பெறவிருக்கின்றது.


இன்று தென்னிலங்கையில் வலுவான கட்சியாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்சி மேலெழுந்து வருகிறது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணிலும் இணைந்து ஜெனீவா தீர்மானங்களை நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அதை அவர்களால் நடத்தவும் முடியாது. எனவே, எவ்வாறான எச்சரிக்கை சமிக்ஞைகள் வந்தாலும் இந்த அரசாங்கம் எதையும் செய்துவிடும் என்று நம்பியிருக்க முடியாது.

எனவே, இவ்வாறான நிலைமைகள் இருக்கும் சூழ்நிலையில், நாங்கள் சர்வதேச சமூகங்களின் ஒத்துழைப்பை பெற்று அடுத்த கட்ட நடவடிக்கைகளை நகர்த்த வேண்டுமாகவிருந்தால், ஒரு திடமான முடிவினை அனைத்து தமிழ் தரப்புகளுடன் ஒருமித்து எடுக்க வேண்டும்.

சர்வதேச தீர்ப்பாயத்தை கோரப் போகிறோமா? சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு செல்லப் போகின்றோமா? அல்லது வேறு ஏற்பாடுகள் இருக்கின்றனவா? என்பது தொடர்பில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், கட்சித் தலைவர்கள், புலம்பெயர் அமைப்புகள் என அனைவரும் ஒன்றுகூடி ஒருமித்த முடிவுக்கு வரவேண்டும். அவ்வாறு எடுக்கப்பட்ட ஒருமித்த முடிவை எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பில் ஆராய வேண்டும். முக்கியமாக மனித உரிமைகள் ஆணையகத்தின் உறுப்பு நாடுகளுடன் பேச்சுகளை நடத்தி எங்களுடைய கோரிக்கைக்கு ஆதரவாக அவர்களை வைத்திருப்பதன் மூலம்தான் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் எங்களால் சரியான தளத்தில் பயணிக்கக்கூடியதாக இருக்கும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட எச்சரிக்கை தனியே எச்சரிக்கையாகவே இருந்துவிடுமே தவிர, அடுத்தகட்ட நகர்வுகள் எதுவும் இருக்கமாட்டாது.

இந்தத்தடவை பல தமிழ்த்தலைவர்கள் ஜெனீவாவுக்கு சென்றிருந்த போதிலும் பக்க அமர்வுகளில் மாத்திரமே இவர்களால் கலந்துகொள்ள முடிந்ததே தவிர, வேறு எதனையும் இவர்களால் சாதிக்கமுடியவில்லை. பக்க அமர்வுகள் அவசியம்தான். ஆனால், எங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவாக உறுப்பு நாடுகளை சம்மதிக்க வைப்பது மிகவும் முக்கியமானது. இந்தப் பணி இன்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரம்தான் எதிர்வரும் மார்ச் மாதம் எங்களுடைய கை ஜெனீவாவில் ஓங்கும்.

எனவே, புலம்பெயர் தமிழர்கள், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள், கட்சித் தலைவர்கள் என அனைவரும் ஒரு மேசையில் கூடி ஆராய்ந்து ஒரு முடிவை எடுத்து அது தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டால் மாத்திரமே மார்ச் மாதம் எங்களுடைய பக்கத்தின் பலத்தை ஜெனீவாவில் நிரூபிக்க முடியும். அதற்கான வேலைகள் இன்றே ஆரம்பிக்கப்பட வேண்டும்.



இலங்கை மீது ஐ.நா.வின் கண்காணிப்பு தேவை

இலங்கையில் நீதிக்கான உறுதிப்பாடுகள் நிறைவேற்றப்படும் வரை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு தேவைப்படுகின்றது என்று நியூயோர்க்கை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருக்கிறது.

பேரவையில் அமுலாக்கலின் முக்கியத்துவம் குறித்து நாங்கள் அடிக்கடி பேசுகின்றோம். சகல தீர்மானங்களையும் நாங்கள் விரும்பியவாறு எம்மால் தீர்மானிக்க முடியும். ஆனால், களத்திலுள்ள மக்களுக்காக உண்மையான முன்னேற்றத்தை அது ஏற்படுத்துவதில்லை.

2015 அக்டோபர் 30/1 தீர்மானத்திற்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியிருந்தது. அச்சமயம் நம்பிக்கை வாய்ப்பு என்பனவற்றைக்கொண்டதாக அந்தத் தீர்மானம் அமைந்திருந்தது. உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோருக்கு நீதி மற்றும் பதிலளிக்கும் கடப்பாட்டு எதிர்பார்ப்பையும் தீர்மானம் தோற்றுவித்திருந்தது. அத்துடன் நிலைமாற்று நீதி பொறிமுறைகள் 4 ஐ ஏற்படுத்துவதாக இலங்கை உறுதியளித்திருந்தது.

நீதி, நல்லிணக்கம் , மனித உரிமைகள் ஆகியவற்றை நாட்டில் மேம்படுத்த இந்த பொறிமுறைகள் ஏற்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் பதிலளிக்கும் கடப்பாட்டு பொறிமுறையும் உள்ளடங்கியிருந்தது. சர்வதேச நீதிபதிகள் விசாரணையாளர்களை சம்பந்தப்படுத்தியும் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை காணாமல் போனோர் அலுவலகம் இழப்பீடுகளுக்கான அலுவலகம் என்பனவே அந்த 4 பொறிமுறைகளும் ஆகும்.

இதுவரை காணாமல் போனோர் அலுவ்லகம் மட்டுமே ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதுவும் ஜெனீவாவில் தற்போது இடம்பெறும் அமர்வுக்கு முன்பாகவே அது அமைக்கப்பட்டிருக்கின்றது. ஏனைய 3 உறுதியளிக்கப்பட்ட பொறிமுறைகள் தொடர்பாகவும் சிறிய முன்னேற்றமே காணப்படுகின்றது. அரசாங்கம் அளித்திருந்த உறுதிமொழியை நிறைவேற்றியிருக்கவில்லை.

குற்றவியல் நீதிமன்றம் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கமாட்டோம்; அமைச்சர் பைசால் முஸ்தபா

''சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கையின் விடயங்களை கொண்டு செல்வதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். சர்வதேசமோ அல்லது வெளித்தரப்பினரோ எமது நாட்டின் நீதித்துறைக்குள் பிரவேசிக்க முடியாது. இவ்விடயம் இலங்கை அரசியல் யாப்பிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே உள்நாட்டு நீதித்துறையில் சர்வதேசத்தின் தலையீட்டினை இலங்கை ஒரு போதும் அனுமதிக்காது'' என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியளாலர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

''ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் பல விவாதங்களும் கலந்துரையாடல்களும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கைக்குள் சர்வதேசத்தினரைக் கொண்டு வந்து நீதிமன்றம் அமைத்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என கூறப்பட்டிருந்தது. எனினும் இலங்கை அரசியல் யாப்பிற்கு உட்பட்ட வகையிலேயே விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பான வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நீதித்துறைக்குள் சர்வதேசமோ அல்லது வெளித்தரப்பினரோ தலையிட முடியாது என இலங்கையின் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதன் படியே நாம் செயற்படுவோம். சர்வதேச தரப்பினரை விசாரணை நடவடிக்கைகளுக்காக இலங்கை அனுமதிக்காது என்பதும் இதன் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதனை பலமுறை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, நடைபெற்ற ஜெனீவா கூட்டத் தொடரில் பல நாடுகள் இலங்கை யுத்தத்தின் பின்னர் நல்லிணக்கம் போன்றவற்றில் சிறப்பான பயணத்தை முன்னெடுத்ததுள்ளது என கூறியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எனவே நல்லிணக்க விடயத்தில் இலங்கை சிறப்பாக செயற்பட்டுள்ளமையை சர்வதேச மக்கள் பொதுவாக ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும் சில நாடுகள் இவ்விடயத்தில் இலங்கை கால தாமத்தை ஏற்படுத்தியுள்ளது என குற்றம் சாட்டியுள்ளன. ஆனாலும் மனித உரிமைப் பேரவை இலங்கை அளித்த வாக்குறுதியின் படி செயற்படுவதாகவும் அதனை நோக்கிய நகர்வுகளை முன்னெடுப்பதாகவும் சர்தேசத்திற்கு கூறியுள்ளது.


கண்டி - திகன இனக்கலவரம் தொடர்பிலும் ஜெனீவா கூட்டத்தொடரில் கேள்வி எழுப்பப்பட்டது. இவை தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கும் பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு எனவும், அவ்வாறு நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் அது தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் தெரிவித்துள்ளது'' என்றார்.

BUYING/SELLING YOUR HOME? CALL ME WITH CONFIDENCE

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc, Brokerage
Independently Owned and Operated
7 Eastvale Dr., Suite 205 Markham, ON, L3S 4N8

Tel: 905-201-9977
Fax: 905-201-9229



NESAN VADIVEL
Sales Representative

Dir:416 453 4333

www.Realtornesan.ca
Or www.Realtornesan.com
Realtornesan@gmail.com



- New Credit • Bad Credit • No Credit • Bankrupt

NO PROBLEM

"OWN A HOME need a loan
GET UP TO $ 50,000.00
NO CREDIT CHECK
Low Docs.
Call 416 890 2300

100% Refinacnce Guaranteed
Banks & Lenders Refused
Regardless of you Credit History
I Guaranteed
Last Miunte Mortgage/Rush
Residential/ Commercial/ Industrial Mortgage

உங்கள் வியாபார முதலீடு, வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்.



Shan Kanapathipillai
416 890 2300
E-Mail: shancanada@gmail.com

200-2005 Sheppard Ave. E., North York ON M2J 5B4

LOW RATE...! FOR SMOKER

If you are smoker, we can give you life insurance for first two years non smoker rate

*Only For Permanent Life Insurance

Super Visa Insurance 100% Refund If visa Denied

Life Insrance
- Whole Life, Term

Non-Medical Life Insurance

Critical Illness Insurance

Mortgage Insurance

RESP -20-40% Grant, 15% Bonus

Travel Insurance


Super Visa Insurance
- with guaranteed refund

LIFE INSURANCE & RESP

Give your family the assurance of a life cover

மருத்துவ பரிசோதனை அற்ற காப்புறுதி திட்டம்
40-85 வயதுவரை

உங்கள் அனைத்துக் காப்புறுதித் தேவைகளையும் பூர்த்தி செய்ய பல வருட அனுபவம் கூடிய ...



Vasanth Vinayagamoorthy
Insurance Advisor
Dir: **647 885 3012**

Canada Protection Plan   Manulife   Assumption Life